# கிறிஸ்துவின் மதிப்புமிக்க தன்மைகள்
# (பகுதி 1)

## புத்தகம் – 16

**வேத பாடசாலை**
67, பராக்கா ரோடு
கீழ்ப்பாக்கம்
சென்னை – 600 010.

The Values of Christ (Part 1)
Booklet - 16
Tamil

© IBL
2004

Cover Credit : Cynthia Kingston
Printed by :

*For additional booklets write to*:
**India Bible Literature,**
67, Beracah Road, Kilpauk,
Chennai - 600 010.

Ph: 26425166 Fax: 26428298
E-mail: ibl.maa@iblchennai.org

## அத்தியாயம் ஒன்று

# அவர் தாமே

இன்று உலகம் முழுவதிலும் "மதிப்புமிக்க தன்மைகளின் வெற்றிடம்" ஒன்று நிலவுவதைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். ஒரு தரமிக்க வாழ்க்கையை வாழுவதற்காக மக்களை வழிநடத்துகிற ஓர் உள்ளான திசைகாட்டி குறைபடுகிறது என்றும் கூறமுடியும். குடும்பத்தின் மதிப்புமிக்க தன்மைகள் சரிந்துகொண்டிருக்கிறது, ஏனென்றால் விவாகரத்துகள் மிக வேகமாக அதிகரித்துக் கொண்டிருக்கின்றன; கோடிக்கணக்கான பிள்ளைகள் தங்களுடைய பெற்றோரின் நிலையான திருமண வாழ்க்கையினால் கிடைக்கவேண்டிய பாதுகாப்பையும், பராமரிப்பையும் இழந்து கொண்டிருக்கிறார்கள்.

சொற்பொருள் அகராதியின்படி, ஒரு மதிப்புமிக்க தன்மை என்பது "ஒரு குறிப்பிட்ட காரியத்தின் தன்மையினால் அது ஏறக்குறைய முக்கியமானதாகவும், பயனுள்ளதாகவும், லாபகர மானதாகவும், இதன் காரணமாக ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது என்று நாம் உறுதிசெய்வதாகும்". தேவனை விசுவாசிப்பவர்கள், எது சரி, எது தவறு என்பதை அவர்களுக்கு வரையறுக்கும் நெறிமுறைகளை அவரில் காண்கிறார்கள். தேவனை விசுவாசிப்பவர்கள் அவர் அவர்களை உருவாக்கியபோதும் அவருடைய குமாரன் அவர்களை மீண்டுமாக மறுபிறப்படையச் செய்த போதும், அவர்களிடம் எதிர்பார்த்த வாழ்க்கையின் தரத்திற்கு அவர்களை வழிநடத்தும் ஒரு மதிப்புமிக்க தன்மையை அவரில் காண்கிறார்களா?

இந்தக் கேள்விக்கு இயேசு இவ்வாறு பதிலளித்தார்: "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" (யோவான் 10:10). இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரிப்பதற்காக மட்டும் இவ்வுலகத்திற்கு வரவில்லை. நாம் எப்படி வாழவேண்டுமென்பதை நமக்குக் காண்பிப்பதற்காகவும் அவர் வந்தார். நமக்கு மதிப்புமிக்க தன்மைகளை முழுமையாக போதித்து, சிறப்பாகக் காட்டியதன் மூலமாக அவர் அதைச் செய்தார். இயேசு வாழ்ந்த மிக முக்கியமான வாழ்க்கையைப் பற்றி வேதாகமத்தின்

நான்கு சுவிசேஷங்களில் நாம் பார்க்கும்போது, முழுமையான மதிப்புமிக்க தன்மைகளை அவர் அடையாளங்காட்டுவதையும், எடுத்துக்காட்டுவதையும், வலியுறுத்துவதையும் காண்கிறோம். கிறிஸ்துவின் அந்த முழுமையான மதிப்புமிக்க தன்மைகளை நாம் கடைப்பிடிக்கும் போது, அவற்றை நாம் அறிக்கையிட வேண்டும்.

புதிய ஏற்பாட்டில், நம்முடைய பாவங்களை அறிக்கையிட வேண்டும் என்று மட்டும் நமக்கு அறிவுறுத்தப்படவில்லை. நாம் இயேசு கிறிஸ்துவை அறிக்கையிடவேண்டும் என்றும் உணர்த்தப் படுகிறோம் (மத்தேயு 10:32; ரோமர் 10:9). "அறிக்கையிடுதல்" என்ற வார்த்தை மூலபாஷையாகிய கிரேக்க மொழியில் "homo" மற்றும் "legeo" என்ற இரண்டு பகுதிகளைக் கொண்டது. "Homo" என்றால் "ஒரே வகையான தன்மை" என்று பொருள்; "legeo" என்றால் "பேசுதல்" என்று பொருள். நாம் நம்முடைய பாவங்களை அறிக்கையிடும்போது, நாம் ஒரே வகையான தன்மையுடையவைகளைப் பேசவேண்டும் அல்லது இயேசு நம்முடைய பாவங்களைப் பற்றிக் கூறுகிறவைகளையே நாமும் கூறவேண்டும். நாம் கிறிஸ்துவை அறிக்கையிடும்போது, நாம் அவர் கூறுகிற காரியங்களையே கூறவேண்டும் அல்லது அவர் ஒரு மதிப்புமிக்க தன்மையை எடுத்துக்காட்டும்போது, போதிக்கும் போது அல்லது வலியுறுத்தும் போது அதை ஒப்புக்கொள்ளவேண்டும்.

கிறிஸ்துவின் மதிப்புமிக்க தன்மைகளை நாம் அறிக்கை யிடுவதற்குத் துவங்க வேண்டுமானால், அவர் தாமே நம்மிடம் வெளிப்படுத்தின தன்மையிலிருந்து துவங்கவேண்டும். இயேசு கிறிஸ்து தம்மை யார் என்று சொன்னார்? கிறிஸ்துவின் அந்த மதிப்புமிக்க தன்மையை நாம் எவ்வாறு அறிக்கையிடவேண்டும்? முதலாம் கேள்விக்கான விடையை நாம் யோவான் எழுதின சுவிசேஷத்தின் மூன்றாம் அதிகாரத்தில் காண்கிறோம். "பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனு மில்லை.... தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (13, 16).

இயேசு தம்மைத்தாமே தேவனுடைய குமாரனென்று அழைத்துக் கொண்டார், ஆனால் நாம் தேவனுடைய குமாரர்களாக இருப்பதைப் போல அவர் தேவனுடைய குமாரனல்ல. நாம் இயேசு கிறிஸ்துவின் மீது, நம்முடைய விசுவாசத்தை வைக்கும்போது, நம்மை நாமே தேவனுடைய குமாரர்களென்று அழைத்துக்கொள்வதற்கான அதிகாரத்தைப்

பெறுகிறோம் (1:12), ஆனால் இயேசு மட்டுமே “ஒரே பேறான” தேவனுடைய குமாரன். இதுவரையில் அல்லது இனிமேலும் எவருமே தேவனுடைய குமாரனாக இருந்திராத ஒரு வகையில் அவர் தேவனுடைய குமாரனாக இருக்கிறார். அவர் தம்முடைய மரணத்திற்கு முன்பாக இவ்வாறு ஜெபித்தார்: “பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்” (17:5). இயேசு சரித்திர பூர்வமாக ஒரு மாட்டுத் தொழுவத்தில் பிறந்து, முப்பத்தி மூன்று வயதிலே ஒரு சிலுவையில் மரித்ததைக் காட்டிலும் மேலானவர். உலகத்தின் தோற்றத்திற்கு முன்பாகவே அவர் தேவனோடிருந்தார்.

ஆனால் இயேசு தம்மை தேவனுடைய ஒரே பேறான குமாரன் என்று அழைத்துக்கொண்டதைக் காட்டிலும் அதிகமானதைச் செய்தார். இயேசு இவ்வுலகத்திலே கூறின காரியங்களிலே மிகவும் உறுதிபடக் கூறிய கூற்று அவர் பரிசேயனான நிக்கொதேமுவிடம் கூறியதாகும். அவர் தாம் “உயர்த்தப்படவேண்டுமென்று” (3:15) கூறினார். “சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டது போல....” அவரும் ஒரு சிலுவையில் அறையப்படவேண்டு மென்பது அதன் பொருள். இயேசு தாம் உயர்த்தப்பட வேண்டுமென்று நிக்கொதேமுவிடம் கூறினார். ஏனென்றால் அவர் தேவனுடைய ஒரே குமாரன், இவ்வுலகத்தின் பாவப் பிரச்சனைக்கான ஒரே தீர்வு, தேவனுடைய ஒரே இரட்சகர்.

இயேசு கிறிஸ்து தம்மை உலக இரட்சகராக வலியுறுத்தியபோது, அவர் தம்மை விசுவாசிக்கிறவர்கள் மட்டுமே இரட்சிக்கப்படுவார்கள் என்ற உறுதியான குறிப்பையும் குறிப்பிட்டார். அவர் உயர்த்தப்பட்டதை சரீரப்பிரகாரமாக அவரைக் கண்டவர்களுக்கு மாத்திரம் இது சாத்தியமல்ல, ஆனால் உலகம் முழுவதிலுமுள்ள மக்களுக்கும் இது சாத்தியமாகிறது: “உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்” (17).

எண்ணாகமம் 21:6-9 வசனங்களில், இஸ்ரவேல் மக்களுடைய தொடர்ச்சியான மனமடிவின் விளைவாக, தேவன் அவர்களுக்குள்ளே அனுப்பின சர்ப்பங்களினால் அவர்கள் மடிந்துகொண்டிருந்தார்கள் என்று வாசிக்கிறோம். ஆனால் மோசே ஒரு வெண்கல சர்ப்பத்தை உயர்த்தும்படி தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார். அதை விசுவாசத் தோடு பார்க்கிற எவனும் சர்ப்பத்தினுடைய விஷத்திலிருந்து குணமாக்கப்படுவான். அதைப் போலவே, இயேசுவும் தம்மை விசுவாசிக்கிற அனைவரும் நித்திய ஜீவனை அடையும்படி அவர்

சிலுவையில் உயர்த்தப்படவேண்டும் என்று அவர் கூறினார் (யோவான் 3:14,15).

இயேசு இவைகளை வலியுறுத்தியபோது, ஒரு மனிதன் எப்படி மறுபடியும் பிறக்கமுடியும் என்று அவர் நிக்கொதேமுவிடம் கூறினார். ஒரு மனிதன் எப்படி மறுபடியும் பிறக்கமுடியும் என்று நிக்கொதேமு இயேசுவிடம் கேட்டான். இயேசு இந்தக் கேள்விக்கு இரண்டு பதில்களைக் கொடுத்தார். முதலாவதாக, காற்றின் செயல்பாட்டை நம்மால் விளங்கிக்கொள்ளமுடியாததுபோல, ஒரு ஆத்துமா மறுபடியும் பிறப்பதில் தேவனுடைய பங்கையும் நம்மால் விளங்கிக்கொள்ளமுடியாது என்று இயேசு நிக்கொதேமுவிடம் கூறினார்: "காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது. அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்திற்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்" (8). மறுபடியும் பிறக்கிற அனுபவம் என்னும் அற்புதத்தில் தேவனுடைய பங்கை இயேசு இப்படியாக விவரித்தார்.

ஒரு வகையில், இயேசு, புதிதாக பிறக்கும் அனுபவத்தில் தேவனுடைய பங்கை நம்மால் ஒருபோதும் புரிந்துகொள்ளமுடியாது என்று கூறினார். ஆனால் மனிதனும் தன்னுடைய புதிய பிறப்பில் பங்கு வகிக்கிறான் என்றும் அவர் கூறினார். அவன் தேவகுமாரனை விசுவாசிப்பது அவனுடைய கடமை: "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுபோகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (16). மறுபடியும் பிறக்கிற அனுபவம் நம்முடைய விசுவாசத்தினாலும் (நம்முடைய பங்கு) தேவனுடைய புதிதாக்கும் ஆற்றலினாலும் (அவருடைய பங்கு) செயல்படுத்தப்படுகிறது.

இயேசு கிறிஸ்து உலகத்தின் இரட்சகர். அவர் உலகத்தைப் பாவத்திலிருந்து மீட்பதற்காகவும், அவர் தாம் யாரென்பதையும், அவர் இந்த உலகத்திற்கு ஏன் வந்தார் என்பதையும் விசுவாசிப்பவர்களுக்குள் ஜீவனை உருவாக்குவதற்காகவும் வந்தார். அவர் தம்மைப்பற்றி உரிமை பாராட்டின காரியங்களை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அவர் தம்மூலமாக வெளிப்படுத்தின மதிப்புமிக்க தன்மைகளை நீங்கள் அறிக்கையிடுகிறீர்களா? அவர் தம்மைப்பற்றி கூறிய காரியங்களுக்கு உங்களுடைய மறுமொழியை பெறுவதற்காக காத்துக்கொண்டிருக்கிறார். ஏனென்றால் அவர் உங்களுடைய பாவங்களை மன்னித்து, உங்களுடைய வாழ்க்கையில் புதிய பிறப்பென்னும் அற்புதத்தைத் துவங்குவதற்கு வாஞ்சிக்கிறார்.

---

## அத்தியாயம் இரண்டு

# அன்பு

இயேசு தாம் ரோம பேரரசினாலும், யூத மதப்போதகர்களாலும் விசாரிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்படுவதற்கான வேளை வந்தது என்பதை அறிந்தபோது, தம்முடைய அப்போஸ்தலர்களாக தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய பன்னிரெண்டு மனிதர்களோடு தம்முடைய கடைசி இரவைக் கழித்தார். அந்த இரவில் இயேசு இந்த மனிதர்களோடு பகிர்ந்துகொண்டவைகளைக் கூறுவதற்கு முன்னுரையாக யோவான் இவ்வாறு எழுதுகிறார். "பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தைவிட்டுப் பிதா வினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே, முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்" (13:1). இயேசு உலகத்தில் தம்முடைய வாழ்க்கையின் முடிவு நெருங்கிவிட்டதை அறிந்தவராக, தம்முடைய பரிபூரண அன்பை இம்மனிதர்களுக்கு காண்பிக்கும்படி அவர்களோடு அந்நேரத்தைச் செலவிட்டார்.

அந்த இறுதிக் கணங்களுக்கு முன்பதாகவும் இயேசு அவர்களை நேசித்தார் என்பதை சீஷர்கள் அறிந்திருந்தார்கள். இயேசு இந்த மனிதர்களை மூன்று வருடங்களாக நேசித்துக் கொண்டிருந்தார். யோவான் தன்னை இயேசு நேசித்தார் என்ற விந்தையிலிருந்து மீளமுடியாமலிருந்தான். அவன் தன்னுடைய சுவிசேஷம் முழுவதிலும், தன்னைக் குறித்து இயேசுவுக்கு அன்பான சீஷன் என்று குறிப்பிடுகிறான். அறுபது வருடங்களுக்குப் பிறகு, அவன் புதிய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகத்தை "நம்மிடத்தில் அன்பு கூர்ந்தவருக்கு" என்ற வார்த்தைகளோடு இயேசுவுக்கு அர்ப்பணித்தான்.

இயேசுவினுடைய முகத்தைப் பார்க்கிற ஆசீர்வாதமான அனுபவத்தைப் பெற்ற எவரும் அவர்கள் அவரால் நேசிக்கப்படுகிறார்கள் என்பதை அறியமுடியும். அப்படியென்றால், அவர்கள் இயேசுவுடன் மேல் வீட்டறையில் கழித்த அந்தக் கடைசி கணங்கள் அவர்கள் அவருடன் செலவழித்த எத்தனையோ நேரங்களைக் காட்டிலும் எவ்வாறு வேறுபட்டிருந்தது? அந்த அறையில், ஒரு அடிமையானவன் அல்லது ஒரு வீட்டு வேலைக்காரன் செய்யவேண்டியதை இயேசு செய்தார். அவர் ஒரு பாத்திரத்தில் தண்ணீரையும், ஒரு சீலையையும் எடுத்துக்கொண்டு, அவர்களுடைய கால்களைக் கழுவினார்! அப்படிப்பட்ட ஒரு தாழ்மையின் செயல் சீஷர்களை நிலைகுலையச் செய்தது. அவர்கள் அந்த மேல் வீட்டறை போஜனத்திற்குப் போகும் வழியில், இயேசு எப்போதும் குறிப்பிட்ட அவருடைய இராஜ்யத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் பண்ணினார்கள் என்று லூக்காவின் சுவிசேஷம் நமக்குக் கூறுகிறது. இயேசு அவர்களுடன் தம்முடைய கடைசி சில மணிநேரங்களைத் துவங்கின விதம் அவர்களை எவ்வளவாக அசைத்திருக்கும் (யோவான் 13:1-17).

இயேசு அவர்களுடைய கால்களைக் கழுவி முடித்தபின்பு, அவர்களைப் பார்த்து, நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? என்று கேட்டார். இக்கேள்விக்கான பதில் மிகவும் தெளிவாக இருப்பதுபோல தோன்றும். அவர் அவர்களுடைய கால்களைக் கழுவினார். ஆனால் இந்தக் கேள்விக்கு இயேசு எதிர்பார்த்த பதிலை, இந்தச் சம்பவத்தைப் பற்றி யோவான் குறிப்பிட்டிருக்கிற வேதாகமப் பகுதியின் துவக்க வசனத்தில் காண்கிறோம்: "....தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே, முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்." இயேசு அவர்களுடைய பாதங்களைக் கழுவினபோது, அவர் அவர்களில் அன்பு கூர்ந்தார்.

இயேசு இந்த மனிதர்களை நேசித்தார்; அவர்களும் தங்களுடைய குறைபாடுள்ள வழிகளில் அவருடைய அன்பைத் திரும்பச் செலுத்தினார்கள். அவர் அவர்களோடு ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார்: "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" (மத். 4:19). அவர்கள் மூன்று வருடங்களாக இயேசுவுடன் இந்த உடன்படிக்கைக்கு உட்பட்டிருந்தார்கள். அந்தக் காலகட்டத்தில், அந்த உடன்படிக்கையை செயல்படுத்துகின்ற சக்தி அன்பு என்பதை அவர்கள் கண்டறிந்தார்கள். அவர்கள் இதுவரை நேசிக்கப் படாத பல வழிகளில் இயேசு அவர்களை நேசித்தார்; அவர்கள் அறிந்திருப்பவைகளுக்கு மேலாகவும், அவர்கள் தங்களைக் குறித்து கனவில் கூட நினைக்காத அளவுக்கு அவர்களை உருவாக்கினார்

என்றாலும், அவர்கள் ஒருவரோடொருவர் ஒரு அன்பின் உடன்படிக்கையைச் செய்யவேண்டுமென்பதை அவர்கள் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள்.

அவர்களோடு இயேசு செலவிட்ட இந்தக் கடைசி நேரத்தின் மையத்தில், அவர் ஒரு புதிய கட்டளையை அவர்களுக்குக் கொடுத்த போது, ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கான ஒரு சவாலை அவர் அளித்தார்: "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" (34). இயேசு இந்தப் புதிய கட்டளையைக் கொடுத்தபோது, அவர்கள் ஒருவரிலொருவர் செலுத்தவேண்டிய அன்பின் தன்மையை அவர் அடையாளங்காட்டினார். அவர் அவர்களை நேசித்த அதே விதத்தில் அல்லது அதே முறையில் அவர்கள் ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும். அவர் அவர்களுடைய கால்களைக் கழுவினதுபோல, அவர்களும் ஒருவருடைய கால்களை மற்றொருவர் கழுவ வேண்டும்.

இந்தச் சம்பவத்தின்போது, அப்போஸ்தலர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு, இந்தப் புதிய கட்டளைக்குக் கீழ்ப்படிவதன் அர்த்தம் என்ன என்பதை உணருவதுபோல நான் பல வேளைகளில் கற்பனை செய்திருக்கிறேன். அப்போஸ்தலர்களில் ஒருவன் தன்னுடைய மக்களாகிய யூதர்களிடமிருந்து ரோமர்களுக்காக வரிகளைச் சேகரித்த ஒரு ஆயக்காரன். மற்றொருவன் பாலஸ்தீனா மீதான ரோம ஆதிக்கத்தை இடைவிடாமல் எதிர்த்து சண்டையிட்ட யூத வெறியர் குழுவைச் சேர்ந்தவன். மேஜையைச் சுற்றி அமர்ந்திருந்த அவர்களுடைய கண்கள் ஒன்றோடொன்று சந்தித்துக் கொண்ட அந்த வேளையில், ஒவ்வொருவருடைய மனதிலும், "நான் – அவனை நேசிப்பதா?" என்ற சிந்தனை எழும்பியிருக்கும் என்று நான் கற்பனை செய்கிறேன். நிச்சயமாகவே இக்கேள்விக்கான பதில் "ஆம், நீ அவனை நேசிக்க வேண்டும். நீ அவனுடைய கால்களைக் கழுவவேண்டும். ஏனென்றால், ஒரு யூத வெறியன் ஒரு ஆயக்காரனுடைய கால்களைக் கழுவுகிறான் என்று உலகம் கேள்விப்படும்போது, நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்பதை அவர்கள் அறிந்துகொள்வார்கள்" என்பதாயிருக்கும்.

நம்முடைய பிள்ளைகளுக்கு அன்பைப் பற்றி போதிப்பதற்கான மிகச்சிறந்த வழி நாம் அவர்களில் அன்பு கூருவதும், தங்களுடைய தாயும், தகப்பனும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கிறார்கள் என்பதை அவர்கள் அறியச் செய்வதுமாகும். உலகம் முழுவதிற்கும் ஒரு அன்பின் சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக இயேசு அப்போஸ்தலர்களான சீஷர்களை அழைத்து, மூன்று வருடங்களாக அவர்களுக்கு பயிற்சி அளித்தார். அவர் தம்முடைய புதிய கட்டளையைப் பல விதங்களில்

விளக்கிக் கூறியபோது, இந்த முழு உலகத்திற்கும் அன்பைப் போதிப்பதற்கான மிகச் சிறந்த வழி, ஒருவரையொருவர் நோக்கிப் பார்ப்பது என்று அவர் அவர்களிடம் கூறிக்கொண்டிருந்தார். பின்பு, “நான் உங்களை நேசித்ததுபோல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பு கூருவீர்கள் என்று உறுதிகொள்ளுங்கள்” என்றார்.

இந்தப் புதிய கட்டளை, பின் நாட்களில் சபை என்று அழைக்கப்படும் ஒரு புதிய மக்கள் குழுவை உருவாக்கியது. கிறிஸ்து அவர்களில் அன்பு கூர்ந்ததுபோல அவர்களும் ஒருவரிலொருவர் அன்புகூருவதன்மூலமாக, அவர்கள் உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப் படுவார்கள் என்று இயேசு கூறினார். “நீங்கள் ஒருவரிலொருவர் (இப்படிப்பட்ட) அன்புள்ளவர்களாயிருந்தால், அதனால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்” (35). இது தான் உண்மையில் நடந்தது. கிறிஸ்து பரமேறிய பிறகு, பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளின் மீது இறங்கினார், சபை துவங்கியது.

### வாழ்க்கையில் செயல்படுத்துதல்

கிறிஸ்துவின் இந்த மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கையிடுகிறீர்களா? மற்ற விசுவாசிகளுடனான உங்களுடைய ஐக்கியம் அன்பினால் இயக்கப்படுகிறதா? ஒவ்வொரு நாளும் உங்களுடைய வாழ்க்கையில் சந்திக்கும் மக்களை நேசிப்பதன்மூலம் கிறிஸ்துவின் இந்த மதிப்புமிக்க தன்மையை நீங்கள் காட்டுகிறீர்களா? அவர்கள் உங்களுடைய முகத்தைப் பார்க்கும்போது, அவர்கள் கிறிஸ்துவின் அன்பினால் நேசிக்கப்படுகிறார்கள் என்பதை அவர்கள் அறிவார்களா? நாம் மேலே பார்க்கும்போதும், உள்ளே பார்க்கும்போதும், நம்மைச் சுற்றிலும் பார்க்கும்போதும் நாம் அன்பு கூரவேண்டுமென்று இயேசு கற்பித்தார் (மத்தேயு 22:36-40). நாம் தேவனை முழுமையாக நேசிக்கவேண்டுமென்றும், நம்மை நாமே சரியாக நேசிக்கவேண்டு மென்றும், மக்களை நிபந்தனையின்றி நேசிக்கவேண்டுமென்றும் இயேசு கற்பித்தார். அன்பைப் பற்றி இயேசு வெளிப்படுத்தின மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கையிடுகிறீர்களா?

## அத்தியாயம் மூன்று

# அவருடைய போதனை

சுவிசேஷங்களின் மூலமாக இயேசுவைப் பற்றி வாசிக்கும்போது, தேவனுடைய வார்த்தையின் மீது அவர் வைத்த மதிப்பைக் கவனித்திருக்கிறீர்களா? அவர் தம்முடைய போதனையைப் பற்றி எவ்வளவாக கூறவேண்டியிருந்தது என்பதைக் கவனித்திருக்கிறீர்களா? இயேசு வேதவாக்கியங்களுக்கு அதிக மதிப்பளித்தார். மதத் தலைவர்களான சதுசேயர்களிடமும், பரிசேயர்களிடமும் அவர் அதிகமாகக் கேட்க விரும்பின கேள்விகளில் ஒன்று “நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா?” என்பதாகும் (மத். 21:42). இயேசு தம்முடைய போதனையைப் பற்றிப் பேசியபோது, அவர் தம்முடைய போதனை என்னவென்றும், தம்முடைய போதனையின் செயல்பாடு என்னவென்றும், அதனால் நாம் அவருடைய போதனையை எவ்வாறு அணுகவேண்டுமென்றும் அவர் நமக்குக் கூறினார். உதாரணமாக, அவர் இவ்வாறு போதித்தார்: “ஒருவனும் கோடித்துண்டைப் பழைய வஸ்திரத்தோடே இணைக்கமாட்டான்; இணைத்தால், அதினோடே இணைத்த துண்டு வஸ்திரத்தை அதிகமாய்க் கிழிக்கும், பீறலும் அதிகமாகும். புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்து வைக்கிறதும் இல்லை; வார்த்துவைத்தால், துருத்திகள் கிழிந்துபோம், இரசமும் சிந்திப்போம், துருத்திகளும் கெட்டுப்போம்; புது ரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைப்பார்கள், அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும்” (மத்தேயு 9:16-17).

இந்த வேதாகமப்பகுதியில், நாம் ஒரே பொருளையுடைய இரண்டு உவமைகளைப் பார்க்கிறோம். முதலாம் உவமை ஆடைகளைப் பழுதுபார்ப்பதைப் பற்றியது. ஒரு தையற்காரர் ஒரு பழைய ஆடையில் புதிதான ஒரு துணியின் ஒரு சிறுதுண்டை ஒட்ட வைத்துத் தைப்பதில்லை, ஏனென்றால் அப்படிச் செய்வதினால் இரண்டு வகையான சேதங்கள் ஏற்படும்: புதிதாக ஒட்ட வைக்கப்பட்டத் துண்டு அந்தப் பழைய துணியை மேலும் கிழித்து, அதிலிருந்த ஓட்டையை

இன்னும் பெரிதாக்கும்; இரண்டாவதாக, புதிய துண்டு பழைய துணியின்மீது பளிச்சென்று காணப்படும்.

இந்த உவமையின் மூலமாக, பழைய ஆடையாகிய மதப்போதகர்களின் அதிகாரங்களின்மீது ஒட்டவைக்கப்படும் ஒரு புதிய துண்டாக தம்முடைய வார்த்தைகள் இருப்பது தம்முடைய நோக்கமல்ல என்று இயேசு போதித்தார். அவருடைய போதனைகள் முற்றிலும் புதிதானவை. மக்கள் சதுசேயர்களிடமும், பரிசேயர்களிடமுமிருந்து பெற்றுக்கொண்டிருந்த போதனைகளைக் காட்டிலும் இயேசுவின் போதனை வேறுபட்டிருந்தது. அவைகள் புதிய போதனைகள் என்பதால், அவைகளை சதுசேயர் மற்றும் பரிசேயருடைய போதனைகளின் மீது ஒட்டவைக்கமுடியாது. இயேசுவினுடைய வார்த்தைகளுக்கும், சதுசேயர் மற்றும் பரிசேயரின் வார்த்தைகளுக்குமிடையே இருந்த மிகப்பெரிய வேறுபாட்டின் காரணமாக அவைகளால் ஒன்றாக இணைய முடியாது.

அவருடைய போதனை மதத்தலைவர்களுடைய போதனையோடு ஒத்துப்போகவில்லை என்பதே இந்த உவமையின் போதனையாகும். அவர் தம்முடைய போதனைகளினால் மதத் தலைவர்களின் கவனத்தை ஈர்த்தார்; தேவனுடைய வார்த்தையைப் பற்றிய ஒரு முழுமையான புதிய அணுகுமுறைக்காக தம்முடைய சீஷர்களை ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்தார்.

இயேசு அந்த எடுத்துக்காட்டிற்குத் தொடர்பாக திராட்ச ரசத்தையும், துருத்திகளையும் பற்றிய ஒரு இரண்டாம் உவமையைக் கூறினார். அந்நாட்களில், மக்கள் திராட்சரசத்தை ஆட்டுத்தோலிலான துருத்திகளில் வைத்து, பல மாதங்களாக அதைப் புளிக்க வைப்பார்கள். திராட்சரசம் புளிப்படையும்போது, திராட்சரசம் விரிவடைந்து, துருத்தியில் அழுத்தத்தை உண்டாக்கும். இந்த விரிவடையும் நிலையின் காரணமாக, மக்கள் புதிய திராட்சரசத்தை ஒரு பழைய தொய்ந்துபோன துருத்தியில் வைப்பதில்லை, ஏனென்றால் புளிப்படைந்த திராட்சரசம் விரிவடையும்போது, அதினால் ஏற்படும் அழுத்தம், இறுக்கமும் வளைந்து கொடுக்காத தன்மையுமுள்ள துருத்தியை உடைத்துவிடும். மாறாக, அவர்கள் புதிய திராட்சரசத்தை ஒரு மென்மையான புதிய துருத்தியில் வைப்பார்கள், ஏனென்றால் புளிப்படையும் திராட்சரசமும், புதிய துருத்தியும் ஒன்றாக விரிவடையும்.

இந்த உவமையின் மூலமாக, இயேசு தம்முடைய போதனைகளுக்கும், மதத்தலைவர்களின் போதனைகளுக்குமிடையே இருந்த வித்தியாசத்தை மீண்டுமாக எடுத்துக்காட்டினார். அவருடைய போதனை புதிய (புளிப்பில்லாத) திராட்சரசம் போன்றது; மதத்தலைவர்

களுடைய போதனை ஒரு பழைய துருத்தியைப் போன்றது. அவர் மதத்தலைவர்களால் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட மதத்தின் அடிப்படையில் போதித்திருப்பாரென்றால், அவருடைய "புதிய திராட்சரசம்" என்னும் போதனைகளின் அழுத்தம் ஸ்தாபிக்கப்பட்ட மதத்தை தகர்த்தெறிந்துவிடும். அவருடைய போதனை, சதுசேயர் மற்றும் பரிசேயருடைய போதனையுடனும் அவர்களுடைய முழுமையான மதக்கலாச்சாரத்துடனும் ஒன்று சேர முடியாது என்பதைக் காட்டவே அவர் இவ்வாறு கூறினார்.

இயேசு தமது மதிப்புமிக்க போதனையைச் சரியான முறைப்படி அணுகும் மக்களிடம் ஏற்படும் விளைவையும் குறித்துப் பேசினார். அவருடைய போதனை சீஷர்களிடம் அழுத்தத்தை ஏற்படுத்தும் என்று அவர் அவர்களை எச்சரித்தார். அவர்கள் அவருடைய போதனையைப் பயன்படுத்தும்போது தங்களுடைய வாழ்க்கையில் அது ஏற்படுத்தும் மாற்றங்களுக்கு தங்களை ஒப்புக்கொடுக்காவிட்டால், அவருடைய போதனை அவர்களுடைய மனங்களை ஒரு பழைய துருத்தியைப் போல வெடிக்கச் செய்திடும்.

இயேசுவினுடைய போதனை புரட்சிகரமானவை. அது ஒரு எச்சரிப்பை அளிக்கிறது – அவருடைய போதனைகள் நம்முடைய வாழ்க்கையை மாற்றுவதற்கு நாம் இடமளிக்கவேண்டும். புதிய துருத்திகளைப் பற்றிய உவமை, மறுபிறப்பின் அற்புதத்தைக் குறிக்கிறது. நாம் மீண்டுமாக பிறக்கும்போது, இயேசுவினுடைய போதனை என்னும் புதிய திராட்சரசத்தை ஏற்றுக்கொள்ளும் புதிய துருத்திகளாக மாறுகிறோம்.

இயேசு தம்முடைய போதனைகளைப் பற்றிக் கூறிய காரியங்களை நீங்கள் அறிக்கையிடுகிறீர்களா? (அதே காரியங்களைக் கூறுகிறீர்களா)? ஒரு புதிய துருத்தியைப் போல அவருடைய போதனையைக் கைக்கொண்டு உங்களுடைய வாழ்க்கையில் அவர் நிலைநாட்ட விரும்பும் சத்தியத்திற்கு உங்களை ஒப்புக்கொடுப்பீர்களா?

---

## அத்தியாயம் நான்கு

## நியாயத்தீர்ப்பு

நியாயத்தீர்ப்பைப் பற்றி உங்களுடைய கருத்து என்ன? நாம் நியாயத்தீர்ப்பைப் பற்றி பல நகைச்சுவைகளைக் கேட்கிறோம்; பல மக்கள் நியாயத்தீர்ப்பை முக்கியமானதாகக் கருதுவதில்லை. நியாயத்தீர்ப்பு ஒரு நகைச்சுவை அல்ல. நியாயத்தீர்ப்பு இறையியலின் ஒரு இறுதித் தேர்வு என்ற நம்பிக்கையை சில விசுவாசிகள் உருவாக்குகின்றனர். இயேசு நியாயத்தீர்ப்பின்மீது வைத்த மதிப்புமிக்க தன்மையையும், நியாயத்தீர்ப்பு எவ்வாறு இருக்கும் என்பதைப் பற்றிய அவருடைய கண்ணோட்டத்தையும் பாருங்கள்: "அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாக சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களைப் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார்.

"அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்கு போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்: வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார். அப்பொழுது, நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே,

நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்கு போஜனங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக் கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக் கண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும்கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்" (மத்தேயு 25:31-40).

நியாயத்தீர்ப்பைப் பற்றிய இந்த விளக்கவுரையில், நாம் இறையியலைக் காணவில்லை, ஆனால் துன்பப்படும் மக்களுக்காக இரக்கத்தைக் காண்கிறோம். கிறிஸ்துதாமே தம்முடைய வாழ்க்கையில் மதிப்பளித்த மக்களுக்கு நாமும் மதிப்பளிப்பதற்கான ஒரு சவாலைப் பார்க்கிறோம் – வியாதியஸ்தர்கள், தனிமையானவர்கள், பசியுள்ளவர்கள், தாகமுள்ளவர்கள், போதுமான ஆடைகள் இல்லாத ஏழைகள், சிறையிலிருப்பவர்கள் – இயேசு உலகத்தில் இருந்தபோது, தம்முடைய பெரும்பாலான நேரத்தை உலகத்தில் துன்பப்படுகிற இப்படிப்பட்ட மக்களுடன் செலவிட்டார்.

இயேசு இந்த மக்களை தம்முடைய சகோதரர்களென்று குறிப்பிடுகிறார். இந்த ஏழை மக்கள் யார்? ஒரு தருணத்தில், தேவனுடைய சித்தத்தைச் செய்கிறவர்களே தம்முடைய தாய், தகப்பன், சகோதரன் மற்றும் சகோதரி என்று இயேசு கூறினார் (மத்தேயு 12:50). சபையினுடைய சரித்திரத்தின் முதல் 300 ஆண்டுகள் வரை, கிறிஸ்துவைப் பின்பற்றுவது சட்டத்திற்கு விரோதமான காரிய மாயிருந்தது. தேவனுடைய மக்கள் எப்போதும் பாடனுபவிக்கிறவர்களாக இருந்தார்கள். இந்த வழிகளில் பாடனுபவித்த மக்கள் தேவனுடைய சித்தத்தைச் செய்ததின் காரணமாக துன்பப்படுத்தப்பட்டு பாடனுபவித்தவர்கள். அவர்கள் யாராக இருந்தாலும், இயேசு கூறுகிறபடி, நாம் அவர்களை நியாயத்தீர்ப்பில் சந்திப்போம்.

தவறாக புரிந்துகொள்ளவேண்டாம், இரட்சிப்பு சமுதாயத்தில் நம்முடைய செயல்பாட்டையோ அல்லது நற்கிரியைகளையோ அடிப்படையாகக் கொண்டதல்ல என்பதை நாம் அறிவோம். கிறிஸ்து நமக்காக தம்முடைய சிலுவையில் செய்த கிரியையின்மீது நாம் வைக்கும் விசுவாசம் மட்டுமே நம்முடைய இரட்சிப்பின் அடிப்படை என்ற சத்தியத்தை, பவுல் ரோமருக்கும், கலாத்தியருக்கும் எழுதின தம்முடைய நிருபங்களில் முழுமையாக வலியுறுத்தியிருக்கிறார்.

என்றாலும், நம்முடைய சமுதாய செயல்பாடும், நற்கிரியைகளும் நம்மை இரட்சித்த விசுவாசத்தை உறுதிப்படுத்துகின்றன என்பதை இந்த அனைத்து வேதவாக்கியங்களும் ஒப்புக்கொள்கின்றன.

மத்தேயு 25ம் அதிகாரத்திலுள்ள இந்த வேதாகமப்பகுதி, விசுவாசிகளுடைய வாழ்க்கையை மதிப்பீடு செய்யும் விதத்தில் நியாயத்தீர்ப்பை விவரிக்கிறது. இயேசு கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையின் போது, ஒவ்வொரு வெறுமையின் பாத்திரமும், ஒவ்வொரு வெறுமையான கரமும், ஒவ்வொரு வெறுமையான இருதயமும் நியாயந்தீர்க்கப்படும் என்பதை இந்த அதிகாரத்திலுள்ள மூன்று உவமானங்களும் போதிக்கின்றன. இரட்சிப்பின் விசுவாசத்தை உறுதியற்றதாக்கும் வெறுமையான பாத்திரங்கள், கரங்கள் மற்றும் இருதயங்களை உடையவர்களாயிருந்தும், தங்களை விசுவாசிகள் என்று கூறிக் கொள்பவர்கள், கர்த்தர் இவ்வாறு கூறுவதைக் கேட்பார்கள்: “சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்....மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள்” (41, 45).

எனவே இந்தக் கேள்வி இப்போது நம்முன் வைக்கப்பட வேண்டும்: இந்த உலகத்தில் துன்பப்படுகிற மக்களுக்கு நாம் என்ன மதிப்பளிக்கிறோம்? நாம் அவர்களைப் போஷிக்கிறோமா, அவர்களை உடுத்துவிக்கிறோமா, அவர்கள் குடிப்பதற்கு எதையாகிலும் தருகிறோமா, அவர்களைக் காணச் செல்கிறோமா, அவர்களை வீட்டிற்குள் சேர்த்துக்கொள்கிறோமா, அவர்களை உபசரிக்கிறோமா, அவர்கள் குணமடைவதற்கு உதவி செய்கிறோமா? தேவனுடைய அன்பின் தேவையோடு இருக்கிறவர்களுக்காக நம்முடைய இருதயம் இரக்கத்தினால் நிரம்புகிறதா? இந்த உலகத்தில் துன்பப்படுகிற மக்கள் கிறிஸ்துவின் மதிப்புத் திட்டத்தில் அதிகமாக பங்கடைகிறார்கள், ஏனென்றால் அவர் “தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி.... சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும்...” அனுப்பப்பட்டார் (லூக்கா 4:18-19).

### “அவர் எங்கே?”

“அவர் எங்கே?” என்று சாஸ்திரிகள் கேட்கும் கேள்வியோடு புதிய ஏற்பாடு துவங்குகிறது. அவர் இன்றைக்கு எங்கே இருக்கிறார்

என்பதை நீங்கள் அறிய விரும்பினால், இந்த உலகத்தில் துன்பப்படுகிற மக்களிடம், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் அன்பு எவ்விடமாக செல்கிறது என்பதைக் கண்டுபிடியுங்கள்.

இந்த உலகத்தில் துன்பப்படுகிற மக்களின்மீது இயேசு கிறிஸ்து வைத்த மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கை யிடுகிறீர்களா? உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் முழுமையான அன்பிற்கும், மக்கள் அனுபவிக்கும் அனைத்து வேதனைகளுக்கு மிடையே அவர் உங்களை நிறுத்தவேண்டுமென்று அவரிடம் கேட்பதற்கு நீங்கள் ஆயத்தமா? இவ்வுலகத்தில் பாடுகளை அனுபவிக்கும் மக்களுக்காக தேவன் செய்ய விரும்பும் காரியங்களின் ஒரு வாய்க்காலாக இருப்பதற்கு நீங்கள் ஆயத்தமா? நான் கூறுகிற இந்த விதமான ஜெபத்தை நீங்கள் ஜெபித்தால், உயிர்த்தெழுந்த கிறிஸ்து எங்கே இருக்கிறார் என்பதையும் உங்களுடைய வாழ்க்கையின் எஞ்சிய பகுதியை நீங்கள் எங்கே செலவழிக்க விரும்புகிறீர்கள் என்பதையும் உங்களால் கண்டு பிடிக்கமுடியும்.

## அத்தியாயம் ஐந்து

## விடுதலை

இயேசு உலகத்தில் வாழ்ந்த காலத்தில், அவர் மதத் தலைவர்களின் கோபத்திற்கு ஆளானார், ஏனென்றால் அவருடைய மதிப்புமிக்க தன்மைகள் உலகத்தினரின் தன்மைகளுக்கு முற்றிலும் முரண்பாடாக இருந்தன. அவர் அவர்கள் போதித்த முறைக்கு எதிர்மறையான முறையில் போதித்தார், அவர்களுடைய கேள்விகளுக்கு அவர் வியப்படையும் விதத்தில் பதிலளித்தார், சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் இருப்பவர்களோடு தோழமை கொண்டிருந்தார், அவருடைய செயல்கள் அனைத்தும், அவர்கள் விடாப்பிடியாக பின்பற்ற விரும்பின நியாயப்பிரமாணத்திற்கு எதிராக இருப்பதுபோல அவர்களுக்குத் தோன்றியது. அவர் செய்வதெல்லாம் தவறு என்று நிரூபிப்பதற்கு அவர்கள் பலமுறை முயற்சித்தார்கள். ஒருமுறை, இயேசு ஓய்வு நாளன்று ஒரு மனிதனை குணமாக்கி, தேவாலயத்திற்கு முன்பாக, தன்னுடைய படுக்கையை எடுத்துக்கொண்டு நடக்கும்படி அவனிடம் கூறினார் (யோவான் 5:2-17). ஒரு சுமையைச் சுமப்பது வேலை செய்வதாகக் கருதப்பட்டதினால், அவனுடைய படுக்கையைச் சுமந்து செல்லும்படி இயேசு அவனிடம் கூறியபோது, அது நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளுக்கு விரோதமானதாகத் தோன்றியது. ஏனென்றால் ஓய்வு நாளில் வேலை செய்வதற்கு நியாயப்பிரமாணம் தடை விதித்தது (யாத். 20:9-11; எரேமியா 17:21,22).

பரிசேயர்களுடனும், சதுசேயர்களுடனும் விவாதத்தைத் தொடங்குவதற்காக இயேசு, இந்த அற்புதத்தைப் பயன்படுத்தினார் என்பது தெளிவாகிறது. இத்தகைய உரையாடல் யோவான் எழுதின சுவிசேஷத்தின் நான்கு அதிகாரங்களில் இடம் பெறுகிறது (5-8). இந்த உரையாடலில், இயேசு தாம் யார் என்றும், அவர் இந்த உலகத்திற்கு ஏன் வந்தார் என்றும் பல காரியங்களை விவரிக்கிறார். அவர் கூறியவற்றைக் கேட்ட இந்த யூதர்களில் பெரும்பாலானோர் அவருடைய வார்த்தைகளை இழிவாகக் கருதினார்கள்; அவர் கைது செய்யப்படவேண்டும் அல்லது

கல்லெறிந்து கொல்லப்படவேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள், ஆனால் அவருடைய உரையாடலின் முடிவில், அவர்களில் சிலர் உண்மையாகவே விசுவாசித்தார்கள். இயேசு இவ்விதமாக விசுவாசித்தவர்களை நோக்கி, "நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலை யாக்கும்" என்றார் (யோவான் 8:31-32). இந்த வசனத்தில், இயேசு தம்முடைய போதனையின் மதிப்பைப் பற்றி மற்றொரு மகத்தான காரியத்தை உறுதிபடக் கூறுகிறார் – அவருடைய வார்த்தையில் நிலைத்திருந்தால் ஆவிக்குரிய விடுதலையைப் பெறுவார்கள் என்பதே அவர் அளிக்கும் உறுதி.

நம்முடைய விசுவாசத்திற்குத் தேவையானது நம்பிக்கை மட்டுமே என்றும், நாம் விசுவாசித்துவிட்டால் இதுவரை ஒன்றும் நடக்காததுபோல நம்முடைய வாழ்க்கையைத் தொடரலாம் என்றும் மக்கள் பல வேளைகளில் நினைக்கிறார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டில் விசுவாசிகளுக்கு இயேசு இவ்வாறாகக் கூறவில்லை. ஒரு மனிதன் விசுவாசித்தபோது, இயேசு தம்முடைய போதகத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டினார். அவர்கள் விசுவாசித்தால், அவருடைய வார்த்தையில் நிலைத்திருப்பார்கள், அவருடைய உண்மையான சீஷர்களாக மாறுவார்கள், பின்பு அவருடைய போதனையில் அவர்கள் கண்டறியும் சத்தியம் அவர்களை விடுதலையாக்கும்.

சீஷன் என்பவன் மற்றொருவருக்குக் கட்டுப்பட்டு வேலையைக் கற்றுக்கொள்ளும் ஒரு பணியாளுக்கு ஒப்பானவன். அந்தப் பணியாள் இரண்டு வாரங்கள் வகுப்பறையில் ஒரு தொழிலைப் படிக்கவேண்டும், பின்பு இரண்டு வாரங்கள் ஒரு கப்பல் தொழில் பட்டறையில் பணிபுரியவேண்டும். அவன் அத்தொழிலைக் கற்றுக்கொள்ளும்போது, அவன் தான் கற்றுக்கொள்வதை நடைமுறையில் செயல்படுத்துகிறான், பின்பு அவன் மீண்டுமாக வகுப்பறைக்குச் சென்று, இன்னும் அதிகமான காரியங்களைக் கற்றுக்கொள்கிறான். ஒரு சீஷன் என்பதற்கு விளக்கம் என்னவென்றால், ஒரு சீஷன் தான் கற்றுக்கொள்பவற்றை செய்கிறான்; தான் செய்பவற்றைக் கற்றுக்கொள்கிறான். பன்னிரெண்டு அப்போஸ்தலர்களும் தாங்கள் இயேசுவினுடைய சீஷர்கள் என்பதன் பொருளுக்கு மிகச்சிறந்த மாதிரிகளாக விளங்கினார்கள், அவர்கள் மூன்று வருடங்களாக இயேசுவினால் பயிற்றுவிக்கப்பட்டார்கள். அவர் அவர்களுக்குப் போதித்தார், அவர் அவர்களுக்கு எடுத்துக்காட்டினார், அவர் அவர்களுக்குப் பயிற்சியளித்தார்.

“சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்” (32) என்று இயேசு வாக்களித்தபோது, “அறிவீர்கள்” என்ற வார்த்தை உறவுமுறையினால் அறிந்து கொள்ளுதலைக் குறிக்கிறது. நாம் அவருடைய வார்த்தையில் நிலைத்திருந்து, அதை நடைமுறையில் செயல்படுத்தினால், சத்தியமாக இருக்கும் தேவனுடன் நாம் உறவுமுறைகொள்கிறோம்; இந்த உறவுமுறை நம்மை விடுதலையாக்கும்.

இயேசுவைப் பொறுத்தவரை, அவரை விசுவாசித்து, அவருடைய சீஷர்களில் ஒருவனாக மாறுதல் என்பது மூன்று பரிமாணங்களை உடையதாகும். முதலாவதாக, இயேசு தேவனுடைய ஒரே குமாரனென்றும், நம்முடைய பாவப்பிரச்சனைக்கான ஒரே தீர்வு என்றும், தேவனுடைய ஒரே இரட்சகர் என்றும் நாம் விசு வாசிக்கிறோம். பின்பு நாம் அவருடைய வார்த்தையில் நிலைத் திருப்பதினால் அவரைப் பின்பற்றுகிறோம். நாம் அவருடைய உண்மையான சீஷர்களாக அவரைப் பின்பற்றும்போது, அவரையும், அவருடைய வார்த்தையையும் மட்டுமல்ல, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவையும் அறிந்துகொள்கிறோம். அதற்குப் பின்பு நடப்பது என்ன, அவர் நம்மை விடுதலையாக்குகிறார். அவர் நம்மை விடுதலையாக்கும்போது, நாம் மெய்யாகவே விடுதலையாகிறோம்.

உயிர்த்தெழுந்து, ஜீவிக்கிற கிறிஸ்துவை நீங்கள் இந்த முறையில் அறிந்திருக்கிறீர்களா? அவருடனான உறவுமுறையின் மூலமாக அவரைப்பற்றி ஆழமாக அறிந்துகொள்ளும் அனுபவம் உங்களுக்கு உண்டா? இந்த உறவுமுறை, நீங்கள் ஒரு காலத்தில் அறிந்திருந்த பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து உங்களை விடுதலையாக்கியுள்ளதா? இயேசு கிறிஸ்துவின் இந்த மதிப்புமிக்க பண்பை நீங்கள் அறிக்கையிட விரும்பினால், அவரை விசுவாசியுங்கள், அவருடைய வார்த்தையில் நிலைத்திருங்கள், அவருடைய உண்மையான சீஷனாக மாறுங்கள், சமயச்சடங்குகளைக் கடந்து சென்று ஜீவ வார்த்தையுடன் உறவுகொண்டு, மெய்யாகவே விடுதலையடையுங்கள்!

## அத்தியாயம் ஆறு

## மன்னிப்பு

சீமோன் என்ற ஒரு பரிசேயன் இயேசுவைத் தன்னுடைய வீட்டிற்கு விருந்திற்காக அழைத்தான் (லுக்கா 7:36-50). வீட்டிற்கு வரும் விருந்தாளிகளுக்குத் தங்களுடைய கால்களைக் கழுவ ஒரு பாத்திரத்தில் தண்ணீரையும், தங்களுடைய நெற்றிகளில் பூசுவதற்கு எண்ணெயையும், விருந்தோம்பலை வெளிப்படுத்தும் ஒரு முத்தத்தையும் கொடுப்பது அக்காலத்தில் வழக்கமாக இருந்தது. ஆனால் இயேசு சீமோனின் வீட்டிற்குச் சென்றபோது, இவைகளில் ஒன்றையும் சீமோன் இயேசுவுக்குச் செய்யவில்லை. அந்த நகரத்தில், ஒரு பாவியாக அறியப்பட்டிருந்த ஒரு பெண், இயேசு சீமோனின் வீட்டிற்கு மதிய உணவிற்காக வந்திருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்டாள், இந்தப் பெண் இயேசுவை ஏற்கனவே சந்தித்திருக்கிறாள் என்றும், அவளுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்ற நிச்சயத்தை அளிக்கும் இரட்சிப்பையும் பெற்றுக்கொண்டாள் என்பதையும் நாம் ஊகிக்க முடியும். சீமோன் இயேசுவுக்குக் கொடுக்க வேண்டிய வழக்கமான விருந்தோம்பலைக் கூட அளிக்கவில்லை என்பதை அவள் உணர்ந்தபோது, அவள் இயேசுவின் பாதங்களைத் தன்னுடைய கண்ணீரினால் நனைத்து, தன்னுடைய தலைமுடியினால் அதைத் துடைத்தாள். பின்பு அவள் அவருடைய பாதங்களில் விலையேறப் பெற்ற வாசனை எண்ணெயைப் பூசினாள்.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த சீமோன். “இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார்; இவள் பாவியாயிருக்கிறாளே” (39) என்று தன் இருதயத்தில் எண்ணினவனாக மதிப்பீடு செய்தான், சீமோனுடைய நினைவுகளை அறிந்துகொண்ட இயேசு, ஒரு உவமையைக் கூறினார்: “ஒருவனிடத்தில் இரண்டு பேர் கடன்பட்டிருந்தார்கள்; ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும், மற்றவன் ஐம்பது வெள்ளிக் காசும் கொடுக்கவேண்டியதாயிருந்தது. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான். இப்படியிருக்க, அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக

அன்பாயிருப்பான்?" (41-42). சீமோன் அவரை நோக்கி, "எவனுக்கு அதிகமாய் மன்னித்துவிட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான்" என்றான். அதற்கு அவர், "சரியாய் நிதானித்தாய்" என்று சொன்னார்.

இந்த உவமை, இயேசு, அந்தப் பெண் மற்றும் சீமோனுக் கிடையே நடந்துகொண்டிருந்த காரியங்களுடன் நேரடியாகப் பொருந்தியது. இந்த உவமையை அங்கு நிலவிய சூழ்நிலையோடு ஒப்பிட்டு, நம்முடைய பாவங்களுக்கான மன்னிப்பின்மீது நாம் வைக்க வேண்டிய மதிப்பை அடையாளங் காட்டும்படி இயேசு இவ்வாறு கூறினார்: "இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே; நான் உன் வீட்டில் பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை, இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள். நீ என்னை முத்தஞ் செய்யவில்லை. இவளோ, நான் உட்பிரவேசித்தது முதல், என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள், நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை, இவளோ என் பாதங்களில் பரிமளத்தைலம் பூசினாள். ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன்; இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது; இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்புகூருவான்" (44-47).

நாம் அதிகமாக அன்புகூருவதினால் மன்னிக்கப்பட்டோம் என்பது இதன் பொருளல்ல. அந்தப் பெண் தன்னுடைய விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டாள் என்று இயேசு சொன்னார், "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடேபோ" (50). அவள் பெற்ற மன்னிப்பின்மீதும், இரட்சிப்பின்மீதும் அவளுக்கு இருந்த விசுவாசத்தை, இயேசுவின்மீது அவள் வைத்த அன்பு உறுதிப்படுத்துகிறது; ஆனால் இந்த பாவியாகிய பெண்ணைப் பற்றி சீமோன் கொண்டிருந்த மனப்பாங்கு, அவனுடைய விசுவாசக் குறைவை எடுத்துக்காட்டியது. இயேசு இந்தப் பெண்ணின் அன்பான ஆராதனையை ஏற்றுக் கொண்டு, அவளுடைய பாவங்களை மன்னித்ததன் மூலமாக அவளுடைய செயலை உறுதிப்படுத்தினார், ஏனென்றால் அவள் தான் பெற்றுக்கொண்ட மன்னிப்பிற்கு அதிக மதிப்பளித்தாள்.

மன்னிப்பின்மீது இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கையிடுகிறீர்களா? இந்தப் பெண்ணைப்போல, நீங்களும் ஒரு பாவி என்றும், உங்களுடைய குற்றவுணர்வு உங்களுடைய பாவத்தை ஒரு மிகப் பெரிய கடனைப் போல தோன்றச் செய்து, உங்களுடைய அன்பை தடை செய்கிறது என்றும் உணர்வீர்க ளென்றால், உங்களுடைய பாவத்தை நிவிர்த்தி செய்வதற்காக

சிலுவையில் மரிக்கும்படி இயேசு வந்தார் என்பதை உணருங்கள். விசுவாசத்தினால் உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருந்தால், தன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதினால் அதிகமாக அனபுகூர்ந்த இந்தப் பெண்ணைப்போன்ற மற்ற மக்களிடம் இரக்கத்தைக் காண்பிக்கும் அளவிற்கு, நீங்கள் பெற்ற மன்னிப்பிற்கு மிகவும் அதிகமாக மதிப்பளியுங்கள்.

## அத்தியாயம் ஏழு

# இரட்சிப்பு

இயேசு தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்தில், கலிலேயாவிலுள்ள ஒரு ஜெபஆலயத்தில் மக்களுக்கான தம்முடைய ஊழியத்தைத் துவக்கினார்; அங்கு அவர் மக்களுக்கு முன்பாக ஏசாயா புஸ்தகத்தின் ஒரு சுருளை வாசித்தார்: "கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர் களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப் படுத்தவும் நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்" (லூக்கா 4:18-19).

பொதுமக்களிடையே, வெளிப்படையாக அவருடைய ஊழியத்திற்கு துவக்கமளித்த அந்த விளக்கவுரைக்குப் பிறகு, அவர் "நாசரேத் கொள்கை விளக்க அறிவிப்பு" என்ற தம்முடைய எளிய செய்தியைப் பிரசங்கிக்கத் துவங்கினார்; "நாசரேத் கொள்கை விளக்க அறிவிப்பு" என்பதன் பொருள் இந்த உலகத்தில் அவர் செய்யும் பணியைப்பற்றிய தரிசன விளக்கம் என்பதாகும். இயேசு தம்முடைய வாழ்க்கையில் சந்திக்கும் மக்கள், ஆவிக்குரிய பிரகாரமாக, குருடர்களாக, கட்டுண்டவர்களாக, உடைந்தவர்களாக இருப்பதைக் காணும்போது, அவர்களிடம் தம்முடைய இரக்கத்தைக் காண்பித்து, அவர்களுடைய வாழ்க்கையில் இரட்சிப்பின் அனைத்துப் பரிமாணங்களையும் கொண்டு வந்து, அவர்களை இரட்சிப்பது அவருடைய கொள்கை விளக்க அறிவிப்பாக இருந்தது.

ஆனால் அவருடைய வாழ்க்கையில் அனுதின வாடிக்கையாக மற்றொரு வகையான மக்கள் குறுக்கிட்டார்கள், இவர்கள் பரிசேயர் என்று அழைக்கப்பட்டார்கள், யூதமதத்தின் பழமை வாய்ந்த கோட்பாடுகளைக்

கட்டிக் காப்பதற்காகத் தங்களை அர்ப்பணித்திருந்த இந்த சமயப்பற்றுள்ள யூதர்கள் பரிசேயர் எனப்பட்டனர். சில வழிகளில், அவர்கள் மிகவும் சமயப்பற்றுள்ளவர்களாக விளங்கினார்கள். அவர்கள் யூத மதத்தின் கோட்பாடுகளைப் பின்பற்றியவர்கள்.

பரிசேயர்கள் தங்களை ஆவிக்குரிய பிரகாரமாக குருடர் களாகவோ அல்லது தேவையுள்ளவர்களாகவோ காணவில்லை; அவர்கள் எப்போதும் இயேசுவினுடைய ஊழியத்திற்குத் தூரமாக நின்றுகொண்டு, அவர் மோசேயின் நியாயப்பிரமாணத்தை மீறியதாகத் தங்களுடைய விரலை நீட்டி அவரை குற்றப்படுத்து கிறவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய இருதயக் கடினத்திற்காகவும், ஆவிக்குரிய உயர்வைத் தாங்கள் அடைந்து விட்டதாக எண்ணும் உணர்விற்காகவும் இயேசு அவர்களிடம் கோப முற்றார். ஆனால் அவர் அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துவதில் அதிக நேரம் செலவிட்டார், ஏனென்றால் அவர்கள் அதிகமாக மதிப்பளித்த நியாயப்பிரமாணத்தின் கருத்தை அவர்கள் அறியவேண்டுமென்று தாம் விரும்பினார்.

இயேசு காணாமற்போனவைகளைப்பற்றிய தம்முடைய மிகச் சிறந்த உவமையைப் போதித்தபோது, அவர் அதைத் தம்முடைய ஊழியத்தில் முக்கியத்துவம் கொடுத்த காணாமற்போன மக்களுக்காகவும், பரிசேயர்களுக்காகவும் ஒரே நேரத்தில் பேசினார் (லூக்கா 15). அவருடைய சீஷர்களாக இருப்பதற்கு அளிக்கப்படவேண்டிய காரியங்களைப் பற்றிய ஒரு ஆற்றல்மிக்க செய்தியை அவர் பிரசங்கித்தபின், பாவிகள் அவருக்கு அருகில் இருக்கவும், அவருடைய போதனைகளை இன்னும் அதிகமாகக் கேட்கவும் விரும்பி, அவரைச் சூழ்ந்துகொண்டார்கள். பரிசேயர்களும், சதுசேயர்களும் இயேசுவிடமிருந்து விலகி பாவிகளுடன் இயேசு இருப்பதைப் பற்றி முறுமுறுத்து, அவருக்குத் தூரமாக ஒரு வெளிவட்டத்தை தங்களுக்கென உருவாக்கினார்கள்.

பரிசேயர்கள் தங்களை பாவத்தினால் நித்தியத்தை இழந்து போனவர்களாகக் கருதவில்லை; எனவே அப்படிப்பட்ட மக்களிடம் அவர்கள் இரக்கம் காண்பிக்கவில்லை. இந்த இரண்டு வகையான மக்கள் தம்மைச் சூழ்ந்திருக்க, இயேசு தம்முடைய உவமையைப் போதித்தார். அவர் உண்மையில் இந்த உவமையை அந்த வெளிவட்டத்திலிருந்த பரிசேயர்களுக்காகவும், சதுசேயர்களுக்காகவும் கூறினார்; உள்வட்டத்திலிருந்த ஆயக்காரர்களும், பாவிகளும் அனுபவித்துக் கொண்டிருந்த இரட்சிப்பினால் அவர்களுக்குள் என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை அவர் பரிசேயர்களுக்கு விளக்கினார். பரிசேயர்களும் உள்வட்டத்திற்குள் வந்து, பாவத்தில்

காணாமற்போனவர்களைத் தேடி, இரட்சிப்பதற்கான தம்முடைய பணியில் பங்குபெறும்படி அவர்களை அவர் அழைத்தார். “இப்படிப்பட்ட காணாமற்போன மக்கள் கண்டுபிடிக்கப்படும்போது பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகிறது, எனவே நீங்கள் ஏன் மகிழ்ச்சியடையவில்லை?” என்பது அந்த வெளிவட்டத்தின் மக்களுக்கு அவர் அளித்த சவாலாகும்.

உண்மையில், இயேசு வெளிவட்டத்திலிருந்தவர்களிடம் இவ்வாறு கூறிக்கொண்டிருந்தார்: “நீங்கள் இந்த மக்களைப் பார்க்கும் போது, ஆயக்காரர்களையும், பாவிகளையும் காண்கிறீர்கள், தேவன் பார்ப்பது என்ன என்று நான் உங்களுக்குச் சொல்லட்டும். தேவன் காணாமற்போன ஆடுகளையும், காணாமற்போன மகன்களையும் மகள்களையும் பார்க்கிறார்”. இந்தக் காணாமற்போன மக்களைப் பற்றிய அவருடைய உவமையின் கருத்து இரண்டு மகன்களையுடைய ஒரு தகப்பனைப் பற்றியது.

இந்த உவமையின் இரண்டாம் பகுதியில், மூத்த மகன் தன்னுடைய சகோதரன் திரும்பி வந்ததைக் குறித்துத் தன்னுடைய கருத்தை வெளிப்படுத்துவதைக் காண்கிறோம்: “அவனுடைய மூத்தகுமாரன் வயலிலிருந்தான். அவன் திரும்பி வீட்டுக்குச் சமீபமாய் வருகிறபோது, கீதவாத்தியத்தையும் நடனக்களிப்பையும் கேட்டு, ஊழியக்காரரில் ஒருவனை அழைத்து, இதென்ன என்று விசாரித்தான். அதற்கு அவன்: உம்முடைய சகோதரன் வந்தார், அவர் மறுபடியும் சுகத்துடனே உம்முடைய தகப்பனிடத்தில் வந்து சேர்ந்தபடியினாலே அவருக்காகக் கொழுத்த கன்றை அடிப்பித்தார் என்றான். அப்பொழுது அவன் கோபமடைந்து, உள்ளே போக மனதில்லாதிருந்தான். தகப்பனோ வெளியே வந்து, அவனை வருந்தியழைத்தான், அவன் தகப்பனுக்குப் பிரதியுத்தரமாக: இதோ, இத்தனை வருஷகாலமாய் நான் உமக்கு ஊழியஞ்செய்து, ஒருக்காலும் உம்முடைய கற்பனையை மீறாதிருந்தும், என் சிநேகிதரோடே நான் சந்தோஷமாயிருக்கும்படி நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியையாவது கொடுக்கவில்லை. வேசிகளிடத்தில் உம்முடைய ஆஸ்தியை அழித்துப்போட்ட உம்முடைய குமாரனாகிய இவன் வந்தவுடனே கொழுத்தக் கன்றை இவனுக்காக அடிப்பித்தீரே என்றான். அதற்குத் தகப்பன்: மகனே, நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது, உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் காணப்பட்டான்; ஆனபடியினாலே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்கவேண்டுமே என்று சொன்னான்” (25-32).

பல வழிகளில், மூத்த சகோதரன் கெட்ட குமாரனைக் காட்டிலும் அதிகமாக காணாமல் போயிருந்தான், ஏனென்றால்

அவனுடைய மதிப்புமிக்க தன்மைகள் அவனுடைய தகப்பனுடைய மதிப்புமிக்க தன்மைகளிலிருந்து அவ்வளவாக எடுபட்டிருந்தது. மூத்த சகோதரன் பரிசேயர்களுக்கு ஒப்பானவன், ஏனெனில் அவர்கள் பாவத்தில் காணாமற் போனவர்கள், இரட்சிக்கப்படுவதன் அற்புதத்தைத் தூரத்திலிருந்து காண்கிறார்கள், ஆனால் அந்த உள்வட்டத்திற்குள் வந்து, பாவிகளின் மனந்திரும்புதலைக் குறித்து மகிழ்ச்சியடையவில்லை. மூத்த சகோதரனைப் போல, அவர்கள் கோபமடைந்தார்கள்; அவர்கள் உள்ளே வந்து, மரித்த இவர்கள் ஜீவனைக் கண்டடைந்து, காணாமற்போன இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் மிகப் பெரிய அற்புதத்தைக் கொண்டாடுவதற்கு மனமில்லாதிருந்தார்கள்.

அந்தத் தகப்பன் காணாமற்போன தன்னுடைய மகன் திரும்பி வந்ததைக் குறித்து மகிழ்ச்சியடைந்தான், ஆனால் அடங்காத இளைய மகனை மீண்டுமாக வீட்டிற்குள் தகப்பன் வரவேற்றதைப் பற்றி மூத்த சகோதரன் கோபமடைந்தான். இளைய மகன் திரும்பி வந்ததற்கான கொண்டாட்டத்திலிருந்து தகப்பன் வெளியே வந்து, மூத்த சகோதரனும் உள்ளே வந்து கொண்டாட்டத்தில் பங்கு பெறும்படி அவனை அழைத்ததைப் போலவே, பரிசேயர்களும் அந்த உள்வட்டத்திற்குள் வந்து, பாவிகளின் மனந்திரும்புதலுக்காக மகிழ்ச்சியடையும்படி இயேசு அவர்களை அழைத்தார். அவர் தம்முடைய மூன்று வருட ஊழியத்தில், ஆவிக்குரியபிரகாரமாக தரித்திரராக இருந்தவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, தம்முடைய கொள்கை விளக்க அறிவிப்பில் அவர்களைப் பற்றி விவரித்தார். இப்படிப்பட்ட மக்களை இரட்சிப்பின் சுவிசேஷத்தினால் சந்திப்பது அவருடைய ஊழியமாக இருந்தது – இந்த ஊழியத்தில் பரிசேயர்களும் தம்முடன் பங்குபெறும்படி அவர் அவர்களை அழைத்தார், இந்த உலகத்தில் பாவத்தில் காணாமற்போன மக்களுக்கு இயேசு அளித்த மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கையிடுகிறீர்களா? இந்த உலகத்தின் பாவிகளை சந்திக்கும்போது நீங்கள் எவ்வாறு உணருகிறீர்கள்? ஒரு பாவியின் அனுதின வாழ்க்கை எப்படி இருக்கிறது என்ற கடுமையான உண்மையிலிருந்து உங்களுடைய சபை கலாச்சாரம் உங்களை பிரித்துவிட்டதா? உங்களுக்குள் வாழும் கிறிஸ்து காணாமற்போனவர்களிடம் காண்பித்த அன்பையும், இரக்கத்தையும் நீங்கள் வெளிப்படுத்துகிறீர்களா? இல்லையென்றல், நீங்களும் இப்படிப்பட்ட மக்களை நேசிக்க முடியாத பரிசேயர்களைப் போல மாறிவிடும் ஒரு அபாயத்தில் இருக்கிறீர்கள்.

இந்த உலகத்தில் பாவத்தின் காரணமாக காணாமற்போன மக்களை மீட்டு, ஜீவிக்கின்ற கிறிஸ்துவின் ராஜ்யத்தில் சேர்ப்பதற்காக

நாம் அவர் பயன்படுத்தும் வாகனங்களாக செயல்படுகிறோம். காணாமற்போனவைகளைப் பற்றிய அவருடைய உவமையை நினைவுகூர்ந்து, காணாமற்போன காரியங்களுக்கு அவர் அளித்த மதிப்புமிக்க தன்மையை அறிக்கையிடுங்கள், இந்த உலகத்தில் ஆவிக்குரிய குருடர்களுக்கு பார்வையளிக்கவும், கட்டுண்டவர்களை விடுதலையாக்கவும், உடைக்கப்பட்டு, காயமடைந்தவர்களை குணமாக்கவும் அவர் மேற்கொண்ட பணியில் அவருடன் பங்குபெறும்படி அந்த உள்வட்டத்திற்குள் வாருங்கள்.

## அத்தியாயம் எட்டு

## விசுவாசத்திற்கான இறுதியான அதிகாரம்

“விசுவாசத்திற்கும், அதை செயல்படுத்துவதற்கும் இறுதியான அதிகாரம் என்ன?” என்பது சமயக் கோட்பாட்டைச் சார்ந்திருப்பவர்களின் கேள்வி. நம்முடைய விசுவாசமும், வாழ்க்கையும் எந்த அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது? நாம் எதை விசுவாசிக்கிறோம்; நம்முடைய விசுவாசத்தை ஆதாரமாகக் கொண்டு, நாம் எப்படி வாழுகிறோம்? ஓர் ஆய்வின்படி, அந்தக் கேள்விக்கான பதில், ஒன்று தேவன் அல்லது மனிதன் – நம்முடைய வாழ்கையின் ஆதாரம், ஒன்று தேவனுடைய வெளிப்பாடாக இருக்க வேண்டும் அல்லது மனிதனின் பகுத்தறிவாக இருக்கவேண்டும்.

இயேசு வேதவாக்கியங்களுக்கு அதிகமாக மதிப்பளித்தார். வேதாகமத்தின் முதல் மூன்று சுவிசேஷங்களிலும், இயேசு முதலாவதாக பேசிய வார்த்தையில் “எழுதியிருக்கிறதே” என்ற வார்த்தை இடம்பெறுகிறது. பரிசேயர்கள் அவரிடம் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்தபோது, அவர் பலவேளைகளில் “நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா?” என்ற வார்த்தைகளைத் தம்முடைய பதில்களுக்கு முன்பதாகக் கூறினார், பரிசேயர்கள் வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்களை நன்றாக அறிந்திருந்தார்கள். இந்தப் பரிசேயர்கள் வேதவாக்கியங்களை நன்கு கற்றறிந்த வேத அறிஞர்களாக இருந்தார்கள், அவர்கள் தேவனுடைய வார்த்தையில் நிபுணர்களாக இருந்தார்கள்; இயேசுவும்கூட அவர்களுடைய வேத ஞானத்தை ஆமோதிக்கும்வகையில், “வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள” என்று கூறினார் (யோவான் 5 : 39). ஆனால் அவர்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்திருப்பார்களென்றால், அவர்களுக்கு முன்பாக ஜீவனோடும், சுவாசத்தோடும் நின்று கொண்டிருக்கிற மேசியாவை அவர்கள் அடையாளம் கண்டிருக்க வேண்டும் என்றும் அவர் தொடர்ந்து சொன்னார். “வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே (யோவான் 5:39-40).

பரிசேயர்கள் வேதநிபுணர்களாக இருந்தாலும், அவர்களுடைய விசுவாசமும், அதன் நடைமுறை பயன்பாடும் தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகிறது. இயேசு அவர்களிடம் "நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா?" என்று கேட்டதினால் இது உண்மை என்று விளங்குகிறது. வேதவாக்கியங்கள் பரிசேயருடைய இறுதியான அதிகாரமாக இருந்திருக்குமென்றால், அவர்கள் இயேசுவுக்கு விரோதமாகக் கேள்விகளைக் கேட்டிருக்கமாட்டார்கள், தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் உண்மையான கருத்தைப் பரிசேயர்கள் புரிந்து கொள்ளவில்லை என்பதை அவர்களுடைய பல பழக்கங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

உதாரணமாக, இயேசு தம்முடைய சீஷர்களுடன் வயல்வழியாக நடந்து கொண்டிருந்தார். அவருடைய சீஷர்கள் பசியாக இருந்ததினால், அவர்கள் இயேசுவுடன் நடந்துகொண்டிருக்கும்போது, சில கதிர்களைக் கொய்து, தின்னத் தொடங்கினார்கள். அது ஓய்வுநாளாக இருந்தபடியால், இயேசுவின் சீஷர்கள் நியாயப் பிரமாணத்தை ஏன் மீறுகிறார்கள் என்று பரிசேயர் அவரிடம் கேட்டார்கள். அதற்கு இயேசு, "தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்த போது செய்ததை நீங்கள் வாசிக்கவில்லையா? அவன் தேவனுடைய வீட்டில் பிரவேசித்து, ஆசாரியர் தவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தேவசமுகத்து அப்பங்களைத் தானும் தன்னோடிருந்தவர்களும் புசித்தார்களே" என்று கூறினார் (மத்தேயு 12:34). பரிசேயர்கள் வேதத்தை வாசிக்கவில்லையா என்று அவர் அவர்களிடம் கேட்ட பல சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்று. தாவீது பசியாயிருந்தபோது நியாயப்பிரமாணத்தின்படி, ஆசாரியர்கள் மட்டுமே புசிக்க வேண்டிய தேவசமுகத்து அப்பங்களைப் புசித்தான் என்ற உதாரணத்தை இயேசு மேற்கோள்க்காட்டினார் ( I சாமு. 21:1-6). அந்த தேவசமுகத்து அப்பங்கள் வைக்கப்பட்டதன் நோக்கம், "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்ற கர்த்தருடைய ஜெபத்தை ஒத்திருக்கிறது (மத்தேயு 6:11). தேவன் நம்முடைய தேவைகளை எப்போதும் சந்திப்பார் என்ற வாக்குத்தத்தத்தைக் குறிக்கும் ஒரு வழிபாட்டு அடையாளமாக தேவசமுகத்து அப்பங்கள் விளங்கின.

மற்றொரு வேளையில், இயேசு மோசேயினுடைய நியாயப்பிரமாணத்திற்கு எதிரிடையான காரியங்களைப் போதித்தார் என்று அவரைக் குற்றச்சாட்டும் எண்ணத்துடன், பரிசேயர்கள் திருமணத்தைப்பற்றி அவரிடம் விவாதித்தார்கள். ஒரு மனிதன் தன்னுடைய மனைவிக்குத் தள்ளுதற்சீட்டை கொடுப்பதற்கு மோசே

அனுமதித்தார் என்று கூறி அவர்கள் இயேசுவுடன் வாக்குவாதம் பண்ணினார்கள். இயேசு மோசேயினுடைய வார்த்தைகளுக்கு எதிரிடையாகப் பேசியிருந்தால், பரிசேயர்கள் அவருக்கு அவப்பெயரை உண்டாக்கியிருப்பார்கள். ஆனால் இயேசு, "ஆதியிலே மனுஷரை உண்டாக்கினார், அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும் இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா?.... உங்கள் மனைவிகளைத் தள்ளி விடலாமென்று உங்கள் இருதய கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை" (மத்தேயு 19:4-5,8) என்று பதிலளித்தார்.

மனிதர்களுடைய இருதயம் தங்களுடைய மனைவிகளிடம் கடினப்பட்டிருந்ததன் காரணமாக மட்டுமே மனைவிகளை விவாகரத்து செய்வதற்கு மோசே அனுமதித்தார் என்பதை எடுத்துக்காட்டுவதற்காக, இயேசு வேதவாக்கியங்களை முரண் பாடற்ற முறையில் பரிசேயர்களுக்கு எடுத்துரைத்தார், அக்காலத்தில் ஒரு பெண்ணுக்குக் கொடுக்கப்பட்ட தள்ளுதற்சீட்டு அவளுக்குக் கணவனிடமிருந்து இறுதியான நஷ்ட ஈடாக பணத்தையும், சில உரிமைகளையும் அளித்தது. புருஷர்கள் தங்களுடைய மனைவிகளுக்கு எந்த பணவசதியையும் அளிக்காமல் அவர்களை நிர்க்கதியாக விட்டுச்சென்ற காரணத்தினால் மோசே விவாகரத்தைப் பற்றிய தள்ளுதற் சீட்டை எற்படுத்தினார். இதைத் தான் மனிதர்களுடைய இருதயங்கள் கடினப்பட்டது என்று மோசேயும், இயேசுவும் குறிப்பிட்டார்கள்.

நியாயப்பிரமாணத்தின் ஒரு தலைப்பை அல்லது ஒரு சிறு பகுதியைத் தாம் மாற்றி, தேவனுடைய நியாயப்பிரமாணத்தையும், மோசேயின் நியாயப்பிரமாணத்தையும் நிறைவேற்றுவதாக இயேசு அறிவித்தபோது, தாம் போதித்த காரியங்கள் அனைத்திற்கும் தேவனுடைய வார்த்தை ஆதாரமாயிருந்தது என்பதை அவர் வலியுறுத்தினார். வேதவாக்கியங்கள் தம்முடைய விசுவாசத்திற்கும், அதன் பயன்பாட்டிற்குமான இறுதியான அதிகாரம் என்பதை அவர் எடுத்துக்காட்டினார்; அனால் அவர்களுடைய பாரம்பரியமே அவர்களுடைய விசுவாசத்திற்கும், பயன்பாட்டிற்குமான இறுதியான அதிகாரமாக இருந்தது என்பதை அவர்களுடைய பழக்கங்களும், அவர்களுடைய போதனைகளும் எடுத்துக்காட்டின. அவர்கள் வேதவாக்கியங்களை விசுவாசித்து, புரிந்துகொண்டிருப்பார்களென்றால்,

இயேசுவினுடைய போதனைகளையும், செயல்களையும் அத்தனை ஆணித்தரமாக எதிர்த்திருக்கமாட்டார்கள்.

வேதவாக்கியங்களைப் பற்றி இயேசு கூறிய அதே காரியங்களை நீங்களும் கூறுகிறீர்களா? தேவனுடைய வார்த்தை உங்களுடைய விசுவாசத்திற்கும், அதன் பயன்பாட்டிற்கும் இறுதியான அதிகாரமாக இருக்கிறது என்பதை உங்களுடைய மதிப்புமிக்க தன்மைகள், உங்களுடைய வார்த்தைகள் மற்றும் உங்களுடைய வாழ்க்கையினால் எடுத்துக்காட்டுகிறீர்களா? நெறிமுறை மற்றும் ஒழுங்கைப் பற்றிய நம்முடைய கேள்விகளைச் சந்திப்பதற்கான ஒரு நெறிமுறை திசைக்காட்டியும், நெறிமுறை சட்டங்களும் இல்லாத கலாச்சாரத்தில் இன்றைக்கு நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இன்றைக்கு, மக்கள் தீர்மானங்களை எடுக்கும்போது, அத்தீர்மானங்களை வழிநடத்தும் ஒரு சரியான, அதிகாரமிக்க நியதி இல்லாத காரணத்தினால், நெறிமுறை மற்றும் ஒழுக்கம் சார்ந்த மிக மோசமான விளைவுகளை அவர்கள் சந்திக்கிறார்கள். தேவனுடைய வார்த்தைக்கு இயேசு அளித்த மதிப்பை அறிக்கையிடுவது தற்போது அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது, வேதவாக்கியங்களை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? என்ற சவால் இன்றும் நம்மை எதிர் கொள்ளுகிறது.

## அத்தியாயம் ஒன்பது

## கீழ்ப்படிதல்

துன்பம் என்பது இவ்வாழ்க்கையில் தவிர்க்கமுடியாத ஒன்று, நம்மால் அதைத் தவிர்க்கமுடியாது, அது நம்முடைய அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்கிறது, ஏனென்றால் நாம் ஒரு வீழ்ச்சியடைந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமக்கு வரும் துன்பத்தை நம்மால் கட்டுப்படுத்த முடியாவிட்டாலும், துன்பத்தை எவ்வாறு சந்திக்கிறோம் என்பதை நம்மால் கட்டுப்படுத்த முடியும். நாம் துன்பத்தை சந்திக்கும் முறையை நம்முடைய நம்பிக்கை நிர்ணயிக்கிறது; இயேசு தம்முடைய மலைப்பிரசங்கத்தின் முடிவுரையில் கூறிய கருத்துகளை இதற்கு ஆதாரமாக எடுத்துக் கொள்ளமுடியும்: “நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டிய புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெரு வெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்” (மத்தேயு 7:24-27).

இங்கு, இயேசு இரண்டு மனிதர்களைச் சித்தரிக்கிறார்— ஒருவன் கன்மலையின்மீது தன்னுடைய வீட்டைக் கட்டினவன். மற்றொருவன் மணலின்மீது தன்னுடைய வீட்டைக் கட்டினவன் இரண்டு மனிதர்களும் ஒரேவிதமான புயலைச் சந்தித்தார்கள்— பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்தது, ஆனால் கன்மலையின்மேல் கட்டின வீடு மட்டும் உறுதியாக நின்றது. அனைத்து மனிதர்களும் துன்பத்தைச் சந்திக்கிறார்கள் என்று இந்தக் கதையிலிருந்து அறிகிறோம் – அவர்கள் எப்படிப்பட்ட வீடுகளைக் கட்டியிருந்தாலும் – அனைத்து மனிதர்களும் புயலை எதிர் கொள்கிறார்கள். கேள்வி என்னவென்றால், அவர்கள் கட்டின

வீடு புயலின் சீற்றத்தைத் தாக்குபிடிக்குமா? இரண்டு மனிதர்களுக்கிடையே இருந்த முக்கியமான வேறுபாடு, அவர்கள் தங்களுடைய வீட்டை எப்படி, எங்கு கட்டினார்கள் என்பதாகும்.

இயேசு இந்த உவமையை நமக்காக விளக்குகிறார். இயேசுவினுடைய போதனைகளைக் கேட்டு, அதன்படி நடந்தவன் புத்தியுள்ள மனிதனென்றும் (24), அதே போதனைகளைக் கேட்டும், இயேசுவினுடைய போதனைகளைத் தன்னுடைய வாழ்க்கையில் கடைப்பிடிக்காதவன் புத்தியில்லாத மனிதனென்றும் (26) இயேசு கூறினார். இயேசுவினுடைய வார்த்தைகளைக் கேட்டதினால் அந்த வீடு உறுதியாக நிற்கவில்லை, ஏனென்றால் இரண்டு மனிதர்களும் அவற்றைக் கேட்டார்கள். இயேசுவினுடைய வார்த்தைகளைத் தங்களுடைய வாழ்க்கையில் கடைப்பிடித்ததே அவர்களுக்குள்ளே வித்தியாசத்தை உண்டுபண்ணியது. புத்தியுள்ள மனுஷன் தன்னுடைய வீட்டைக் (வாழ்க்கை) கட்டிய அந்தக் கன்மலை, இயேசுவினுடைய வார்த்தைகளைக் கேட்பதோ, புரிந்து கொள்ளுதலோ, மனப்பாடம் செய்வதோ, மேற்கோள் காட்டுவதோ அல்லது அவற்றை மற்றவர்களுக்கு போதிப்பதோகூட அல்ல. ஞானம் என்பது அறிந்து கொண்டவைகளைப் பயன்படுத்து வதாகும். இந்தப் புத்தியுள்ள மனுஷன் அதைப் புரிந்துகொண்டான்; எனவே அவன் இயேசுவினுடைய வார்த்தைகளைத் தன்னுடைய வாழ்க்கையில் பயன்படுத்தினான். புயல் நம்மெல்லாரிடத்திலும் வருவதுபோல அவனிடமும் வந்தபோது அவன் கேட்ட இயேசு வினுடைய போதனையை தன் வாழ்க்கையில் கடைப்பிடித்ததால் அவன் புயலை மேற்கொள்ள முடிந்தது.

இயேசு தம்முடைய மலைப்பிரசங்கத்தை முடித்தவுடனே, அவர் தம்முடைய அப்போஸ்தலர்களோடுகூட கலிலேயாக் கடலைக் கடந்துசென்றார். அவர்களுடைய படகு நடுக்கடலில் சென்று கொண்டிருந்தபோது, அவர்கள் ஒரு சூறாவளிப் புயலைச் சந்திக்க நேர்ந்தது. அப்போஸ்தலர்கள் பயத்தினால் நிரப்பப்பட்டார்கள், ஆனால் இயேசுவோ தூங்கிக்கொண்டிருந்தார்: “அப்பொழுது, அவருடைய சீஷர்கள் வந்து, அவரை எழுப்பி: ஆண்டவரே! எங்களை இரட்சியும், மடிந்துபோகிறோம் என்றார்கள். அதற்கு அவர்: அற்ப விசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொன்னார். மாற்கு எழுதின சுவிசேஷத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது: அவர் அவர்களை நோக்கி ஏன் இப்படி பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார். அவர் எழுந்து, காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று” (மத்தேயு 8:25-27; மாற்கு 4:40).

இந்தக் கதையில், ஒரு சூறாவளிப் புயல், ஒரு மிகுந்த அமைதி, இவை இரண்டிற்குமிடையே இயேசுவிடமிருந்து ஒரு பெரிய கேள்வி: "உங்களுடைய விசுவாசம் எங்கே?". மாற்கு எழுதின சுவிசேஷத்தினுடைய ஆங்கில மொழிப்பெயர்ப்பு ஒன்றில் இயேசுவின் கேள்வி "உங்களுக்கு விசுவாசம் இல்லாமலிருப்பது எப்படி?" என்று எழுதப்பட்டுள்ளது. இந்தப் புயலின் கதையில், அப்போஸ்தலர்கள் தன்னுடைய வீட்டை மணலின்மீது கட்டின புத்தியில்லாத மனிதனைப் போன்றவர்கள் என்று கூறமுடியும். அவனுடைய வீட்டைத் தகர்த்தெறியும்படி புயல் வந்தபோது, அது இடிந்து விழுந்தது. அவர்களுடைய படகைத் தகர்த்தெறியும்படி புயல் வந்தபோது அவர்களுடைய விசுவாசம் விழுந்தது. அவர்கள் புத்தியில்லாதவர்களாக இருந்தார்கள், அவற்றை நடைமுறையில் செயல்படுத்தவில்லை. இயேசு தாம் யாரென்று கூறினாரோ, அவர் அவ்வாறாகவே இருக்கிறார் என்றும், அவர் அந்தப் படகு மூழ்குவதை ஒருபோதும் அனுமதிக்கமாட்டார் என்றும் அவர்கள் விசுவாசித்தார்கள்; ஆனால் அந்த விசுவாசத்தை உண்மையில் அவர்கள் செயல் படுத்தவில்லை. அவர்கள் பயந்தார்கள்! அவர்கள் துன்பத்தைச் சந்தித்தார்கள், அவர்களுடைய நம்பிக்கை இயேசுவினுடைய உவமையில் புத்தியுள்ள மனிதன் போட்ட கன்மலையின் அஸ்திபாரமாக இருந்தது.

இயேசுவைப் பின்பற்றினால் நாம் துன்பத்திலிருந்து விடுதலையாக்கப்படுவோம் என்று அவர் ஒருபோதும் வாக்களிக்க வில்லை. உண்மையில், அது பல வேளைகளில் நமக்கு அதிகமான துன்பத்தை வருவிக்கும் என்று அவர் கூறினார்: "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" (யோவான் 16:33). ஆனால் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு, அவற்றை ஒரு பெரிய புயலின் மத்தியில் பயன்படுத்துகிறவர்கள், தங்களுடைய பெரிய புயல் ஒரு பெரிய அமைதியாக மாறுவதைக் காண்பார்கள் என்று அவர் வாக்களித்தார். அவர்களுடைய வீடுகள் வாழ்க்கையின் புயல்களைத் தாங்கிக் கொள்ளும் அளவிற்கு உறுதியானவையாக இருக்கும் என்றும் இயேசு வாக்களித்தார். ஆனால் அந்த வாக்குத்தத்தம், அவருடைய வார்த்தைகள் நம்முடைய வாழ்க்கையில் ஊடுருவி நம்முடைய வாழ்க்கை முறையை மாற்றவேண்டும் என்ற நிபந்தனையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இயேசு போதித்தவற்றைக் கேட்டு, அவற்றைப் புரிந்து கொள்வதையும் கடந்து, அவருடைய போதனையை நம்முடைய வாழ்க்கையின் ஒரு முக்கிய அங்கமாக மாற்றும்படி நாம் வளரவேண்டும்.

## அத்தியாயம் பத்து

## காயப்பட்ட மக்கள்

இயேசு மக்களுக்கு மிகுதியான மதிப்பளித்தார் – குறிப்பாக காயப்பட்டவர்களிடமும், சரீரப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய தேவையுள்ளவர்களிடமும் அதிக கவனம் செலுத்தினார். சமூகத்தில் ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களைச் சுகப்படுத்தும்படி இயேசு அவர்களுக்காக மனதுருகிய பல சம்பவங்களை நாம் வாசிக்கிறோம் – இரண்டு குருடர்கள் தங்களை சுகப்படுத்தும்படி கூக்குரலிட்டபோது, அவர்களை அமைதியாக இருக்கும்படி மக்கள் சொன்னார்கள்; ஆனால் இயேசு அவர்களைத் தொட்டு சுகமாக்கினார் (மத்தேயு 2:29-34); குஷ்டரோகிகள் ஒதுக்கிவைக்கப்பட்டவர்களாகவும், அசுத்தமானவர் களாகவும் கருதப்பட்டாலும், அவரை நாடிவந்த குஷ்டரோகியை அவர் தொட்டு சுகமாக்கினார் (மாற்கு 1:40-42); இயேசு ஓய்வுநாளில் பிணியாளிகளைச் சுகமாக்குவதற்கு எதிராக பரிசேயர்கள் சதி செய்தாலும், அவர் ஓய்வு நாளன்று ஒரு தேவாலயத்தில் சூம்பின கையையுடைய ஒரு மனிதனைச் சுகமாக்கினார் (மாற்கு 3:1-6). மக்களிடம் இயேசு எவ்வாறு இரக்கம் காண்பித்தார் என்றும், பலருடைய இருதயக் கடினத்தைக் கண்டு எவ்வாறு மனம் வருந்தினார் என்றும் இச்சம்பவங்கள் கூறுகின்றன.

இயேசு தம்முடைய பாதையில் சந்தித்த மக்களிடம் மாத்திரம் இரக்கத்தைக் காண்பிக்கவில்லை. தம்மைப் பின்பற்றிய திரளான மக்களிடமும் தம் மனதுருக்கத்தைக் காண்பித்தார். “இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார்.”

“அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி,

தம்முடைய சீஷர்களை நோக்கி, அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார் (மத்தேயு 9:35-38).

இயேசு திரளான ஜனங்களைக் கண்டபோது, அவர் கவலையுற்றதன் காரணமாக அவருடைய முழு உடலும் குலுங்கியது என்று இந்த வேதாகமப்பகுதியின் கிரேக்க வார்த்தைகள் கூறுகின்றன. அவர் அவர்களிடம் காண்பித்த இரக்கம் அத்தனை உயர்ந்ததாக இருந்தது. ஆனால் துன்பப்படும் இந்த மக்களிடம் அவர் இரக்கம் காண்பித்தது மாத்திரமல்ல, அவர்களுடைய தேவையில் அவர்களுக்கு உதவுவதற்காக ஒரு திட்டவட்டமான செயல்முறையை அவர் வடிவமைத்தார் – அந்த செயல்முறைத் திட்டத்தில் அவருடைய சீஷர்கள் பங்கு பெறும்படிச் செய்தார்.

ஒவ்வொரு முறையும் இயேசு திரளான மக்களின் வேதனையைப் பார்த்தபோதும், அவர் சீஷர்களுக்கு அளித்த பயிற்சியைத் தீவிரமாக்கினார். மேற்கண்ட வேதப்பகுதியின்படி, அவர் அப்போஸ்தலர்களிடம், "அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், ஆதலால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" என்று கூறினார். மத்தேயு சுவிசேஷத்தின் நான்காம் அதிகாரத்தின் இறுதியில், பல நாடுகளிலிருந்து வெகு திரளான மக்கள் அவரிடம் வந்தார்கள் என்று வாசிக்கிறோம். ஒரு பெரிய மக்கள் கூட்டம் ஒன்று கூடியபோது, அவர் அநேக சீஷர்களை ஒரு மலையின் மீது அழைத்து, அவர்களுக்கு ஒரு ஆவிக்குரிய விருந்தை அளித்து, அதில் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களையும் ஈடுபடுத்தினார். அந்தத் திரளான மக்களை அவர் பார்த்தபோதெல்லாம், அந்த பன்னிரெண்டு மனிதர்களின் பயிற்சியை அவர் தீவிரமாக்கினார்.

மத்தேயு 14 மற்றும் 15ம் அதிகாரங்களில், இயேசு ஐயாயிரம் பேரையும் நான்காயிரம் பேரையும் போஷித்ததைக் காண்கிறோம். "...அவர்கள்மேல் மனதுருகி, அவர்களில் வியாதியஸ்தர் களாயிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார்" (14:14) என்று வாசிக்கிறோம். "ஜனங்களுக்காக பரிதபிக்கிறேன். இவர்கள் என்னிடத்தில் மூன்று நாள் தங்கியிருந்து சாப்பிட ஒன்று மில்லாதிருக்கிறார்கள்" (15:32) என்று இயேசு கூறினார். இந்த இரண்டு வேளைகளிலும், அவர் ஒரு சில மீன்களையும், அப்பங்களையும் பெருகப்பண்ணி, அவற்றைப் பசியுடனிருந்த ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குப் பங்கிடும்படி சீஷர்களிடம் கொடுத்தார்.

இந்த இரண்டு வேதாகமப்பகுதிகளும், இயேசுவினுடைய இரண்டு மிகப்பெரிய அற்புதங்களைப் பற்றி மட்டும் நமக்கு அறிவிக்கவில்லை. ஆனால் அவருடைய மிஷனரி தரிசனத்தையும் கூறுகின்றன. இயேசு தமக்கும், திரளான மக்களுக்குமிடையே தம்முடைய சீஷர்களை வைத்து, தாம் ஜனங்களுக்குக் கொடுக்க விரும்பிய நன்மைகளை அவர்களுடைய கரங்களின் மூலமாகக் கொடுத்தனுப்பினார். இந்த உலகத்தில் துன்பப்படும் மக்கள் அனைவருடைய தேவைகளையும்கூட கிறிஸ்து இதே முறையில் தான் சந்திக்க விரும்புகிறார் – அவர் ஜீவ அப்பமாகிய தம்மை தம்முடைய சபையின் மூலமாக உலகத்தில் துன்பப்படும் மக்களுக்குக் கொடுத்தனுப்ப விரும்புகிறார்.

ஜீவ அப்பமாகிய இயேசு தம்மைத்தாமே உங்களுக்குக் கொடுக்கும்படி, அவரிடம் நெருங்குவதற்கு விருப்பங்கொண்ட இந்த துன்பத்திலிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களில் ஒருவராக நீங்கள் இருக்கிறீர்களா? அவர் இவ்வுலகத்திற்கு வந்து, இன்றைக்குத் தம்முடைய சபையிலும், சபையின்மூலமாகவும், வாழ்ந்துகொண்டிருப்பதன் நோக்கம் நீங்கள்தான் என்பதை அறிவதனால் உங்கள் இருதயம் தொடப்படட்டும், அவர் உங்களைத் தொட்டதைப் போல மக்களுடைய இருதயங்களைத் தொடுவதற்கு விரும்புகிறார்.

அதற்கு ஈடாக, இந்த உலகத்தில் துன்பப்படும் மற்ற மக்களுக்கு இயேசு அளித்த மதிப்பை நீங்கள் அறிக்கையிட மனதுள்ளவர்களாக இருக்கிறீர்களா? தேவையுள்ள மக்களிடம் அன்பையும் இரக்கத்தையும் காட்டத் தெரியாத மதத் தலைவர்களைப் போலில்லாமல், தேவையுள்ள மக்களுடைய தேவைகளைச் சரியான முறையில் இயேசு சந்தித்தார். பசியுள்ளவர்களும், துன்பப்படுகிறவர்களுமான மக்களை ஜீவ அப்பத்தினால் போஷிப்பதன் மதிப்பைப் பற்றி இயேசு கூறின அதே காரியத்தை அவருடைய சீஷர்களான நாமும் கூறும்படி அவர் நமக்கு சவாலை அளிக்கிறார். உங்களுடைய வாழ்க்கையில் அடுத்தமுறை ஒரு பசியோடுள்ள, துன்பப்படும் நபரை நீங்கள் சந்தித்தால், அப்படிப்பட்ட மக்களின்மீது இயேசு வைத்த மதிப்பை நினைவுகூர்ந்து, அவரது அன்பையும், ஒளியையும், ஜீவனையும் உங்கள்மூலமாக அந்த நபருக்குக் கொடுக்கும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.

## அத்தியாயம் பதினொன்று

## நானே அவர்

யோவான் எழுதின சுவிசேஷம், கிறிஸ்து தம்மைப் பற்றியும், இவ்வுலகத்தில் தம்முடைய பணியைப்பற்றியும் கூறியதன் வரலாறாகும். இந்த சுவிசேஷத்தில், இயேசு தம்மைப் பற்றிக் கூறினவைகளைக் கருத்தில் கொண்டு, “நான் யாரென்று நீங்கள் கூறுகிறீர்கள்?” என்று அவர் அப்போஸ்தலர்களிடம் கேட்ட கேள்விக்கு நாம் பதிலளிக்கமுடியும். நாம் அதைச் செய்தபின்பு, அவர் தம்மைப் பற்றிக் கூறின அதே காரியங்களைக் கூறுவோமென்றால், நாம் உண்மையாகவே இயேசு கிறிஸ்துவை அறிக்கையிடுகிறோம்.

யோவானுடைய சுவிசேஷத்தின் மூன்றாம் அதிகாரத்தின்படி, இயேசு தம்மைத் தேவனுடைய ஒரே குமாரனென்றும், பாவப் பிரச்சனைக்கான தேவனுடைய ஒரே தீர்வு என்றும், பொதுப் படையாக உலகத்திற்காகவும், குறிப்பாக உங்களுக்காகவும் எனக்காகவும் தேவனுடைய ஒரே இரட்சகரென்றும் நாம் ஏற்கனவே அறிந்திருக்கிறோம். அவர் நம்முடைய இரட்சகராக இருக்கவேண்டும் என்று நாம் விரும்பினால், இயேசு தம்மைப் பற்றி வெளிப்படுத்தின மதிப்புமிக்க தன்மைகளை நாம் அறிக்கையிடவேண்டும்.

யோவானுடைய சுவிசேஷத்தின் அடுத்த அதிகாரத்தில் சமாரியாவின் மையப்பகுதியிலிருந்த சீகேமில், சீகார் என்ற ஊரின் கிணற்றண்டையில் கிறிஸ்து ஒரு பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்ததைப் பற்றி வாசிக்கிறோம். ஒரு சமாரியப் பெண்ணான தன்னுடன், ஒரு யூதரான இயேசு பேசியதைப் பற்றி அவள் அவரிடம் வினவியபோது, அவர் “நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார்” என்று பதிலளித்தார் (4:10).

அந்தக் கிணற்றை அவர்களுக்குக் கொடுத்த அவர்களுடைய

தகப்பனான யாக்கோபைக் காட்டிலும், இயேசு பெரியவரா என்று அந்தப் பெண் அவரிடம் கேட்டபோது, அவர் அவளை நோக்கி, “இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது” என்று சொன்னார் (13-14). இப்படிப்பட்ட தண்ணீரைக் கொடுக்கின்ற அவருடைய வல்லமையினால், அவர் ஒரு சாதாரண மனிதனைக் காட்டிலும் மிகவும் உயர்ந்தவர் என்பதை அவள் ஊகித்தாலும், அவளுக்கு புருஷன் இல்லை என்பதையும், உண்மையில் அவளுக்கு ஐந்து புருஷர் இருந்தார்கள் என்பதையும் அவர் சரியாகச் சொன்னதினாலும், அவள் அவரை ஒரு தீர்க்கதரிசி என்று அழைத்தாள் (19).

இயேசு தொடர்ந்து அவளுடைய ஆவலைத் தூண்டும் வகையில் அவளுடைய கேள்விகளுக்குப் பதிலளித்தார்; அவள் இறுதியாக மேசியாவைப்பற்றிக் குறிப்பிடும்வரை இயேசு அவளுக்குப் பதில் கொடுத்தார்: அவள், “(கிறிஸ்து என்னப்படுகிற) மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார்” என்றாள் (25). அதற்கு இயேசு, “உன்னுடனே பேசுகிற நானே அவர்” (26) என்று கூறினார்.

பின்பு, அந்தப் பெண்ணும், அவள் அறிந்திருந்த சில சமாரியர்களும் இயேசுவைக் கிறிஸ்து என்று உறுதிபடக் கூறினார்கள்: “உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம்” (42). அவர் சமாரியப் பெண்ணுடன் பேசினபோது, தம்மை மேசியாவாகிய கிறிஸ்து என்றும், உலகத்தின் (ஒரே) இரட்சகர் என்றும் அறிக்கையிட்டு வெளிப்படுத்தின மதிப்புமிக்க தன்மையை அந்தச் சமாரியர்கள் அறிக்கையிட்டார்கள்.

அவர் மேசியாவுடன் பேசிக்கொண்டிருக்கிறார் என்பதை அவள் உணர்ந்தபோது, அவளுடைய உட்கருத்து என்ன? அவள் தன்னுடைய தண்ணீர் குடத்தை அங்கேயே வைத்துவிட்டு (அவள் முதலாவதாக அங்கு வந்ததன் காரணம் தண்ணீர் எடுப்பதற்காக), அவரைப் பற்றித் தன்னுடைய ஊராரிடம் சொல் வதற்காக நகரத்திற்குள் போகிறாள். அவளுடைய கலாச்சாரத்தில், ஒரு பெண் ஆண்களிடம் எதையாகிலும் பற்றிப் பேசுவது வழக்கத்துக்கு மாறான செயலாகும். இயேசு ஒரு சமாரியப் பெண்ணான தன்னுடன் பேசியதைப் பற்றிப் ஆச்சரியப்பட்டாள். இயேசு தாம் இவ்வுலகத்திற்கு வந்தது பரிசுத்தவான்களுக்காக அல்ல, ஆனால் பாவிகளுக்காக என்று காட்டினார் (மத்தேயு 9:13).

இயேசுவுடனான அந்தப் பெண்ணின் சந்திப்பு, யோவானுடைய சுவிசேஷத்தில் இயேசுவைப் பற்றிக் கூறப்பட்டவை களுக்கு நம்முடைய சொந்த பதிலென்ன என்பதைச் சிந்திக்கும்படி நமக்கு ஒரு சவாலை அளிக்கிறது. அவளிடம் தாகத்துக்குத்தா என்று கேட்கிறவர் இன்னார் என்று அவள் அறிந்திருந்தால், ஜீவத் தண்ணீரைக் கொடுக்கும்படி அவளே அவரிடம் கேட்டிருப்பாள் என்று இயேசு கூறினார். நம்முடைய நடைமுறைப் பயன்பாட்டில், நாம் ஒவ்வொரு முறை ஜெபிக்கும்போதும், இது நமக்கு ஒரு சவாலை அளிக்கிறது. நாம் ஜெபிக்கும்போது, சர்வவல்லவராகிய தேவனுடன் பேசுகிறோம். நாம் சர்வவல்லவராகிய தேவனுடன் பேசுகிறோம் என்பதை விசுவாசித்தால், நாம் அவரிடம் எதைக் கேட்கவேண்டும்?

யோவானுடைய சுவிசேஷம் முழுவதிலும், இயேசு தாம் யாரென்றும், அவர் இந்த உலகத்தில் ஏன் வந்தார் என்றும் நமக்குத் தொடர்ந்து கூறுகிறார். தேவன் செய்கிற அனைத்தையும் தம்மால் செய்யமுடியும் என்று இயேசு கூறினபோது, அவர் தாம் தேவனுக்குச் சமமானவர் என்றே வலியுறுத்தினார்: "பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார். அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்" (5:19). இதில் மரித்தவர்களை உயிருடன் எழுப்பி, அவர்களுக்கு ஜீவனைக் கொடுப்பதும் அடங்கும், ஏனெனில் அதை தேவன் ஒருவரால் மட்டுமே செய்யமுடியும்.

ஒரு நபர் தான் தேவனுக்கு சமமானவர் என்று சொல்வாரென்றால், உடனே அவரைச் சுற்றியுள்ள மக்கள், "தேவன் செய்வதை உம்மால் செய்யமுடியுமா?" என்று அவரிடம் கேட்பார்கள். இந்தக் கேள்விக்கு இயேசு 'ஆம்' என்று பதிலளித்தார், அதை அவர் நிரூபித்தார். இயேசு மரித்தவர்களை உயிருடன் எழுப்பி, அதன் வாயிலாக தாம் தேவனுக்கு சமமாகயிருப்பதையும், தேவனால் மட்டுமே செய்யக்கூடிய காரியங்களைத் தம்மால் செய்யமுடியும் என்பதையும் நிரூபித்தார். இந்த மதத்தலைவர்கள் கூறினதுபோல, இயேசு தம்மை தேவனுக்கு சமமானவராக உரிமை பாராட்டினார் (யோவான் 5:18).

யோவான் தன்னுடைய சுவிசேஷத்தின் 5ம் அதிகாரத்தில் விவரிக்கத் தொடங்கின இந்த உரையாடல் உச்சக் கட்டத்தை அடையும்போது, 8ம் அதிகாரத்தின் இறுதியில், இயேசுவுக்கும், மதத்தலைவர்களுக்குமிடையே நடந்துகொண்டிருந்த சச்சரவு வெளிப்படையான எதிர்ப்புணர்ச்சிமிக்கதாக மாறியது

என்று யோவான் கூறினான். இயேசு தாம் ஆபிரகாமை அறிந்தவரைப் போல பேசின போது, அவர்கள் அவரைக் கல்லெறிவதற்காக உண்மையில் கற்களை எடுத்துக்கொண்டார்கள். இதன் காரணமாக, மதத்தலைவர்கள் அவரிடம், “உனக்கு இன்னும் ஐம்பது வயதாக வில்லையே, நீ ஆபிரகாமைக் கண்டாயோ?” என்று வினவினார்கள். அதற்கு இயேசு, “ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” (யோவான் 8:58) என்றார்.

இயேசு தம்மைப் பற்றிக் கூறினவைகளைக் குறித்து இந்த மதத்தலைவர்களுடைய மனங்களில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. நம்முடைய காலத்தின் மதத்தலைவர்கள், இயேசு தம்மைப் பற்றிக் கூறினவைகளைக் குறித்துத் தீவிரமாக கேள்வியெழுப்புகிறார்கள். “அவர் தம்மைப்பற்றிக் கூறினவைகளைக் குறித்து அவர்கள் நிச்சயமற்றவர்களாக இருந்தபோதும், அவர் தாம் கூறினவண்ணமாகவே இருந்தார் என்று நான் நம்புகிறேன். இயேசு தம்மைப் பற்றிக் கூறியவைகளில் சிலவற்றைக் கேட்டு, யோவானுடைய சுவிசேஷத்தை வாசித்து, அவற்றைக் குறித்து நீங்கள் எதை விசுவாசிக்கிறீர்கள் என்பதை நீங்களே தீர்மானியுங்கள். யோவான் 10:30 வசனத்தில், அவர் “நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்” என்றார். யோவான் 14ம் அதிகாரத்தில், பிலிப்பு பிதாவைத் தங்களுக்குக் காண்பிக்கவேண்டுமென்று இயேசுவினிடம் கேட்டுக்கொண்டபோது, அவர், “இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான். அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய்? ...நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்...” என்றார் (9, 11). யோவான் தன்னுடைய சுவிசேஷத்தின் 17ம் அதிகாரத்தில் குறிப்பிடும் உன்னதமான ஜெபத்தை இயேசு ஜெபித்தபோது, அவர், “பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்” என்று கூறினார். சுவிசேஷங்கள் முழுவதிலும், குறிப்பாக யோவானின் சுவிசேஷத்திலும், இயேசு தம்முடைய தெய்வத்தன்மையை உறுதிப்படுத்துவதையும், தம்மைப் பிதாவின் நிலையில் நிறுத்துவதையும் நாம் பார்க்கிறோம்.

இயேசு தம்முடைய 33 வயது வரை மட்டுமே வாழ்ந்தார். ஆனால் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகாலங்களாக, மனித சரித்திரம், அவர் வாழ்ந்ததற்கு முன்பாக என்றும் (B.C.), அவர் வாழ்ந்ததற்குப் பின்பாக என்றும் (A.D.) இரண்டு பகுதிகளாக

பிரிக்கப்படும் அளவிற்கு இந்த உலகத்தில் அவர் தாக்கத்தை ஏற்படுத்தினார்.

இயேசு தம்மைத் தேவனுடைய குமாரனென்றும், பிதாவுக்குச் சமமானவரென்றும், நாம் இரட்சிப்பையும், நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே வழி என்றும் கூறினார். இயேசு தம்மைப் பற்றி வெளிப்படுத்தின மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கையிடவேண்டும். இயேசு யாரென்று நீங்கள் கூறுகிறீர்கள்? அவர் தாம் யாரென்று கூறினாரோ அவர் அவ்வாறாக இருக்கிறார் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? இன்றைக்கு இயேசு தம்மைப் பற்றி வெளிப்படுத்தின மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கையிட்டு, அவரை உங்கள் கர்த்தரென்று அழைக்கிறீர்களா?

## அத்தியாயம் பன்னிரெண்டு

# பிதாவுடன் ஐக்கியம்

இயேசு பிதாவாகிய தேவனுடன் நிலையான ஐக்கியம் கொண்டிருந்தார், அவர் பல வேளைகளில் அதிகாலையில் எழுந்து, பிதாவினிடம் தனிமையாக ஜெபிப்பதில் நேரத்தைச் செலவிட்டார். பிதா தம்மைச் செய்யும்படி கூறியவைகளை மட்டும் தாம் செய்வதைப் பற்றி அவர் அடிக்கடி பேசினார். அவர் பிதாவுடன் கொண்டிருந்த ஐக்கியம் தொடர்ச்சியானதாகவும், ஆழமானதாகவும் இருந்தது, சிலுவையில் அவர் அனுபவித்த பாடுகளில், தம்முடைய பிதாவுடனான அவருடைய ஐக்கியம் முறிக்கப்பட்ட அந்த நேரம் மிக கடுமையானதாகும், ஏனென்றால் அவர் உண்மையாகவே நமக்காகப் பாவமானார்; அதன் காரணமாக, அவருடைய பிதாவுடன் ஐக்கியம் கொள்ளமுடியவில்லை (மாற்கு 15: 34; II கொரிந்தியர் 5:21; ஏசாயா 53: 5,6).

நாமும் பிதாவுடன் ஐக்கியம் கொள்ளவேண்டும் என்பதற்காகவே இயேசு பூமிக்கு வந்து, நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்பதை கெத்சமனே தோட்டத்தில் அவர் செய்த இறுதியான ஜெபத்திலிருந்து அறிகிறோம்: "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" (17:3).

பிதாவுடனான இந்த ஐக்கியத்தின் மதிப்பை எடுத்துக் காட்டும்படி, இயேசு தம்முடைய ஊழியத்தின் ஒரு கட்டத்தில் ஒரு உவமையைச் சொன்னார்: "ஒரு மனுஷன் பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணி, அநேகரை அழைப்பித்தான். விருந்து வேளையில் தன் ஊழியக்காரனை நோக்கி; நீ அழைக்கப்பட்டவர்களிடத்தில் போய், எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது வாருங்கள் என்று சொல்லென்று அவனை அனுப்பினான். அவர்களெல்லாரும் சாக்குப்போக்குச் சொல்லத் தொடங்கினார்கள். ஒருவன்: ஒரு வயலைக் கொண்டேன், நான் அகத்தியமாய்ப் போய், அதைப் பார்க்கவேண்டும், என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன்: ஐந்தேர்மாடு கொண்டேன், அதைச் சோதித்துப்

பார்க்கப் போகிறேன், என்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன்— பெண்ணை விவாகம் பண்ணினேன், அதினால் நான் வரக்கூடாது என்றான்.

“அந்த ஊழியக்காரன் வந்து, இவைகளைத் தன் எஜமானுக்கு அறிவித்தான். அப்பொழுது வீட்டெஜமான் கோபமடைந்து, தன் ஊழியக்காரனை நோக்கி: நீ பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் சீக்கிரமாய் போய், ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் இங்கே கூட்டிக் கொண்டுவா என்றான். ஊழியக்காரன் அப்படியே செய்து: ஆண்டவரே, நீர் கட்டளையிட்டபடி செய்தாயிற்று, இன்னும் இடம் இருக்கிறது என்றான். அப்பொழுது எஜமான் ஊழியக்காரனை நோக்கி: நீ பெருவழிகளிலும வேலிகளருகிலும் போய், என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டுவா; அழைக்கப்பட்டிருந்த அந்த மனுஷரில் ஒருவனாகிலும் என் விருந்தை ருசி பார்ப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றான்” (லூக்கா 14:16-24).

அந்நாட்களில் அந்த கலாச்சாரத்தில், சாப்பிடுதல் ஐக்கியத்திற்கு அடையாளமானது. ஒரு நண்பர், உறவினர் அல்லது மற்றொருவரின் வீட்டில் விருந்திற்காக நீங்கள் அழைக்கப்படும் அனுபவத்திலுள்ள ஐக்கியத்தைக் காட்டிலும் மேலான ஐக்கியம் கிடையாது. வேதாகமத்தின் கடைசி புத்தகத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் ஒரு அழகான உவமானத்தில், இயேசு தாமே நம்முடைய வாழ்க்கையின் கதவினருகில் நின்றுகொண்டு, அதைப் பொறுமையோடு தட்டிக் கொண்டிருப்பதாகக் கூறுகிறார். ஏனென்றால், நாம் கதவைத் திறந்து, அவரை உள்ளே அழைத்து அவரோடு விருந்துண்ண வேண்டுமென்று அவர் விரும்புகிறார் (வெளிப்படுத்தல் 3:20).

தேவனுடைய ஐக்கியத்தின்மீது இயேசு வைத்த மதிப்பு மிக்க தன்மையை இந்த உவமை எடுத்துக்காட்டுகிறது. ஒரு விருந்தை அளிப்பதற்காக தன்னுடைய வீட்டின் கதவுகளை விரிவாகத் திறக்க விரும்பும் ஒரு வீட்டு எஜமானனைப் (தேவன்) பற்றி அது கூறுகிறது, அவன் தன்னுடைய விருந்திற்கு அழைப்பித்த அனைவரும் அவனுடைய அழைப்பைப் புறக்கணித்தார்கள், அவர்கள் ஒரு நிலத்தை வாங்கியிருப்பதாகவும், அதைக் காணும்படி தாங்கள் செல்லவேண்டுமென்றும் போக்குசொல்லத் தொடங்கினார்கள். (அவர்கள் காணாத ஒரு நிலத்தை அவர்கள் வாங்கியிருப்பது விகற்பமாகத் தோன்றுகிறது). ஒருவேளை அந்த நிலத்தைச் சொந்தமாகக்கொள்ளும்படி இப்போது அதைச் சென்று பார்க்கவிரும்புகிறார்கள் என்று எடுத்துக் கொள்ளமுடியும்.

இந்தச் சாக்குப் போக்கின் சாராம்சம், இந்த உலகத்தின் காரியங்கள் தேவனுடன் உள்ள ஐக்கியத்தைக் காட்டிலும் எனக்கு அதிக முக்கியமானவை என்பதாகும்.

அவர்கள் ஐந்தேர் மாடுகளை வாங்கி இருப்பதாகவும், அவற்றைத் தாங்கள் சோதித்துப்பார்க்கவேண்டும் என்பதும் அவர்கள் சொன்ன மற்றொரு சாக்குப் போக்காகும். ஐந்தேர்மாடுகள் ஒரு பெரிய அளவில் விவசாயம் செய்வதைக் குறிக்கிறது. ஏர்மாடுகள் வேலைக்கு அடையாளமாக இருப்பதால், என்னுடைய வேலையின் காரணமாக என்னால் வரமுடியாது என்ற சாக்குப் போக்கை இது சுட்டிக்காட்டுகிறது.

நான் சமீபகாலத்தில் திருமணம் செய்திருப்பதால் என்னால் வரமுடியாது என்பது மூன்றாம் சாக்குப்போக்காகும். “நான் சமீபத்தில் திருமணம் செய்திருக்கிறேன்; எனவே என்னால் வரமுடியாது என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்” என்று பிலிப்ஸ் ஆங்கில மொழிபெயர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது (லுக்கா 14:20). விருந்திற்கு வரும்படி அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் அந்த அழைப்பைப் புறக்கணித்தபடியால், வீட்டு எஜமான் கோபமடைந்தான்; அவன் தன்னுடைய வேலைக்காரனைப் பார்த்து, நகரத்திற்குள் சென்று வியாதியஸ்தர்களையும், ஊனமுற்றவர்களையும் விருந்திற்கு வரும்புடி அழைத்துக்கொண்டுவா என்று கூறினார். இந்த மக்கள் தங்களுக்குச் செய்யப்பட்ட உதவிக்கு கைம்மாறு செலுத்த இயலாத வர்களாகவும், இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சிக்கு ஒருவராலும் அழைக்கப்படாதவர்களாகவும் இருந்தார்கள்.

தேவன் தம்முடைய விருந்திற்கு நம்மை அழைக்கும் பொருட்டு, நம்முடைய பாவங்களுக்காக மரிக்கும்படி தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பவேண்டியதாயிருந்தது. பாவிகள் ஒரு பரிசுத்தமுள்ள தேவனை அணுகுவது எப்படி என்பதை எடுத்துக் காட்டும் எழுச்சிமிக்க கட்டளைகளை ஆராதனையின் கூடாரமும், சாலொமோனின் தேவாலயமும் குறிக்கின்றன, தேவனுடைய பிரசன்னம் ஒரு உட்புற அறையில் இருந்தது; அந்த ஆராதனை முறையின் கட்டமைப்பு, உண்மையில் தேவனுடைய பிரசன்னத்தை அணுகுவதைப் பற்றியதாகும். தேவன் வாசம் செய்த இந்தப் பரிசுத்த ஸ்தலத்தில் ஒரு தடிமனான திரை போடப்பட்டிருந்தது. பாவிகள் அந்தப் பரிசுத்த ஸ்தலத்தை வருடத்திற்கு ஒருமுறைகூட அணுகவில்லை; ஆராதனைக் கூடாரத்தைச் சுற்றிலும் மக்கள் கூடியிருக்க, பிரதான ஆசாரியன் தேவனுடைய மக்களுக்காக தேவப்பிரசன்னத்திற்குள் நுழைந்தான்.

சாலொமோனின் தேவாலயம் தேவனிடம் நெருங்குவதற்கான இதே அணுகுமுறையைச் சார்ந்து கட்டப்பட்டது. அந்த தேவாலயத்தில் போடப்பட்டிருந்த திரை, திரையரங்குகளில் போடப்படும் ஒரு மிகப் பெரிய திரையைப் போலிருந்தது. இயேசு சிலுவையில் மரித்தபோது, அந்தத் திரை மேலிருந்து கீழாக கிழிந்தது, இது பழைய ஏற்பாட்டுக் காலங்களில் தேவனை அணுகுவதற்குக் கூறியிருந்த அவர் கட்டளைகளை மக்கள் இனிமேலும் பின்பற்றவேண்டிய தில்லை என்பதற்கு அடையாளமானது (அதாவது இயேசு மத்தியஸ்தராகிவிட்டார்). இந்த நற்செய்தியைக் கேட்டதும். தேவனை அணுக அங்கு ஒரு மக்கள் நெரிசல் உண்டாயிருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கக்கூடும். ஆனால் அவ்வாறு நிகழவில்லை என்று இயேசுவின் உவமை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

தேவனுடைய மக்கள் அளிக்கவேண்டிய முக்கியத்துவத்தின் குறைவை இந்த சாக்குப்போக்குகள் ஒரு வகைமுறையான முறையில் தெளிவாகக் கூறுகின்றன. இந்த மக்கள் தங்களால் விருந்திற்கு வரமுடியாது என்று கூறியபோது, அது அவர்களுடைய குறைபாடுள்ள சாக்குப்போக்குகள். தாங்கள் விருந்திற்குச் செல்வதை விரும்பவில்லை என்பதை உணர்த்துகிறது, ஏனென்றால் அவர்கள் தேவனுடனுள்ள ஐக்கியத்தைக் காட்டிலும், இந்த உலகத்தின் காரியங்களுக்கும், தங்களுடைய வேலைக்கும், தங்களுடைய மனித உறவுகளுக்கும் அதிகமாக மதிப்பளித்தார்கள்.

தேவனுடன் உள்ள உறவுமுறையின் வியக்கத்தக்க மதிப்பை நீங்கள் உணர்கிறீர்களா? தேவன் தம்முடன் உறவுகொள்வதற்கான வழியைத் திறப்பதற்காக அவர் செலுத்திய கிரயத்தை நீங்கள் உணர்கிறீர்களா? “நானே வழி, என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” என்று இயேசு கிறிஸ்து முழு உலகத்திற்கும் சொல்லும்படி அவர் அளித்த கிரயத்தை உணர்கிறீர்கள்? தேவனுடனான உறவுமுறையின் மதிப்புமிக்க தன்மையைப் பற்றி இயேசு கூறிய (அதே காரியத்தை) நீங்கள் அறிக்கையிடுவீர்களா?

நாம் உண்மையில் எதை விசுவாசிக்கிறோமோ, அதையே செய்கிறோம். மற்றவை யாவும் வெறும் மதப்பிரகாரமான பேச்சுகள் மட்டுமே. உங்களுடைய நேரம், உங்களுடைய பணம், உங்களுடைய அன்பு ஆகியவற்றை நீங்கள் எவ்வாறு செலவிடுகிறீர்கள் என்பதன் அடிப்படையில், இயேசு போதித்த இந்தக் கருத்தாழமிக்க உவமையில் அவர் சுட்டிக்காட்டிய மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கையிடுகிறீர்களா?

---

## அத்தியாயம் பதிமூன்று

# பெதஸ்தா குளத்தருகில் ஒரு மனிதன்

இந்த உலகத்தில் துன்பப்படும் மக்களிடமும், வியாதியஸ்தர்களிடமும் இயேசு வெளிப்படுத்தின மதிப்புமிக்க தன்மையைப் பற்றியும், அவர்களுடைய சுகவீனங்களை நீக்கி, அவர்களுக்கு ஆவிக்குரிய மீட்பை அளிப்பதற்காக அவர் எவ்வாறு வந்தார் என்பதைப் பற்றியும் நாம் ஏற்கனவே அதிகமாக கற்றறிந்திருக்கிறோம். யோவானுடைய சுவிசேஷத்தின் ஐந்தாம் அதிகாரத்தில் இயேசு மதத்தலைவர்களுடன் ஒரு உரையாடலைத் துவக்கும் பொருட்டு ஒரு மனிதனைக் குணப்படுத்தினதைப் பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். இந்த அற்புதத்தை உற்று ஆராயும்போது, இயேசு அதிகமாக மதிப்பளித்த அந்தத் துன்பப்படும் மக்களில் ஒருவனுக்கு சுகத்தை அளித்தபோது வெளிப்பட்ட அவருடைய மற்றொரு மதிப்புமிக்க தன்மையை நாம் கண்டுகொள்ளமுடியும். அந்த மனிதனைக் குணப்படுத்தி இயேசு செய்த அற்புதத்தை யோவான் இவ்வாறு விவரிக்கிறான்: “இவைகளுக்குப்பின்பு யூதருடைய பண்டிகை ஒன்று வந்தது: அப்பொழுது இயேசு எருசலேமுக்குப் போனார். எபிரெய பாஷையிலே பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளம் எருசலேமில் ஆட்டுவாசலினருகே இருக்கிறது, அதற்கு ஐந்து மண்டபங்களுண்டு, அவைகளிலே குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முதலான வியாதிக்காரர் அநேகர் படுத்திருந்து, தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று காத்துக் கொண்டிருப்பார்கள், ஏனெனில் சில சமயங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, தண்ணீரைக் கலக்குவான்; தண்ணீர் கலங்கினபின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதியஸ் தனாயிருந்தாலும் சொஸ்தமாவான்.

முப்பத்தெட்டு வருஷம் வியாதிக்கொண்டிருந்த ஒரு மனுஷன் அங்கே இருந்தான். படுத்திருந்த அவனை இயேசு கண்டு, அவன் வெகுகாலமாய் வியாதியஸ்தனென்று அறிந்து, அவனை நோக்கி: சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார். அதற்கு வியாதியஸ்தன்: ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும்போது

என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவருமில்லை, நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கி விடுகிறான் என்றான். இயேசு அவனை நோக்கி: எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார், உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, நடந்து போனான். அந்த நாள் ஓய்வு நாளாயிருந்தது" (யோவான் 5:1-9).

பெதஸ்தா குளத்தினருகில் படுத்துக்கிடந்த இந்த திரளான மக்கள் "சக்தியற்றவர்களாக" இருந்தார்கள் என்று மூலபாஷையில் குறிப்பிடப்பட்டுள்ளது, அவர்கள் "பெலவீனமுள்ள திரளான மக்கள்" என்று ஒரு மொழிப்பெயர்ப்பு விவரிக்கிறது. அவர்கள் அந்தக் குளத்திற்கருகில் ஒவ்வொரு நாளும் காத்துக்கிடந்தார்கள், ஏனென்றால் அவர்கள் ஒரு மூடநம்பிக்கையாக கருதப்படக்கூடிய ஒரு காரியத்தை நம்பினார்கள். இந்தக் குளத்தில், சில சமயங்களில் ஏற்படுவதுபோல, அலைகள் எழும்பும்போது, அக் குளத்திற்குள் ஒரு தேவதூதன் இறங்கியிருப்பதாகவும், அந்த நேரத்தில் குளத்தில் முதலாவதாக இறங்கும் வியாதியஸ்தன் சுகமடைவான் என்றும் அவர்கள் நம்பினார்கள்.

ஆனால் அந்தக் குளத்தினருகில் ஒரு மனிதன் 38 வருடங்களாக படுத்துக்கிடந்தான். அங்கு இருந்த திரளான பெலவீனமுள்ள மக்களுக்குள், இயேசு தம்முடைய முழு கவனத்தையும் இந்த ஒரு மனிதனின்மீது செலுத்தி, "சொஸ்தமாகவேண்டு மென்று விரும்புகிறாயா?" என்று கேட்டார். இந்த அற்புதத்தின் சூழல் சில கேள்விகளை எழுப்புகிறது. பெலவீனமுள்ள மக்களின் இந்தத் திரளான கூட்டத்தில், இந்த ஒரு மனிதனை மட்டும் குணப்படுத்தும்படி இயேசு ஏன் தெரிந்துகொண்டார்? இந்த குளத்தினருகில் உட்கார்ந்திருந்த மற்ற அனைத்து மக்களையும் இயேசு ஏன் சுகமாக்கவில்லை? இந்தக் குளத்தினருகில் 38 வருட காலமாய் உட்கார்ந்திருந்த மனிதனைப் பார்த்து சொஸ்தமாகவேண்டு மென்று விரும்புகிறாயா என்று இயேசு ஏன் கேட்டார்?

இந்தக் கேள்வி முற்றிலும் பொறுத்தமற்றது என்று நாம் நினைக்கலாம், ஆனால் அப்படியல்ல என்று அனுபவமுள்ள மருத்துவர்கள் உங்களுக்குக் கூறுவார்கள். சில நோயாளிகள் மருத்துவ நிபுணர் கூற்றுப்படி, மனச்சோர்வுற்றவர்களாய் இருப்பதால், அவர்கள் சுகமாக்கப்படுவதை உண்மையில் விரும்புவதில்லை. இயேசு அவனிடம் கேட்ட கேள்வி, "நீ சுகமாயிருக்க விரும்புகிறாயா?" என்பதல்ல என்பதைக் கவனியுங்கள். "நீ சுகமாக்கப்பட விரும்புகிறாயா?" என்பது தான் இயேசுவின் கேள்வி. சுகமாக்கப்படுவதற்கு சுகமாக இருக்கவேண்டுமென்ற விருப்பத்தைக் காட்டிலும் அதிகமான ஒன்று

தேவைப்படுகிறது, கிறிஸ்துவினுடைய வல்லமை நமக்கு எதைச் செய்யமுடியுமோ அதைக் கிறிஸ்துவினுடைய வல்லமையினால் மட்டுமே செய்யமுடியும் என்ற உண்மையை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

அந்த மனிதன் தான் சுகமாக்கப்படுவதற்கான அனைத்து நம்பிக்கையையும் இழந்துவிட்டதாகப் பதிலளித்தான்: “ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவருமில்லை, நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான்” (7).

இந்த ஒரு மனிதன் மட்டும், பெதஸ்தா குளத்தின் வல்லமை தன்னைச் சுகமாக்கும் என்ற நம்பிக்கையை இழந்து விட்டிருந்தான். அவன் மற்ற எந்த ஒரு மனிதனைக் காட்டிலும் தன்னுடைய சுயமுயற்சியினால் வேகமாக சென்று குளத்திற்குள் இறங்கமுடியாது என்றும், எனவே அந்தக் குளத்தால் ஒருபோதும் தன்னைக் குணப்படுத்தமுடியாது என்றும் உணர்ந்தான். அவன் குளத்தின்மீது வைத்த நம்பிக்கை அற்றுப்போனபடியால், தான் சுகமாகும்படி அவன் மற்ற வழிகளைத் தேடிக்கொண்டிருந்தான். பெதஸ்தா குளத்தின் சக்தியற்ற மூடநம்பிக்கையைக் கடந்து, அவன் தன்னைச் சுகமாக்கும்படி தேவனிடம் ஜெபித்திருந்தால் நல மாயிருந்திருக்கும். இப்படிப்பட்ட ஒரு நிலையில் இயேசு அவனைக் கண்டுபிடித்தார் —அவன் ஓர் அற்புதத்திற்காக காத்துக்கொண்டிருந்தான், அந்த அற்புதத்தை அவன் இயேசுவில் கண்டான்.

பல மக்கள் தங்களுடைய அற்புத சுகத்தை தேவனுடைய வல்லமைக்கு வெளியே தேடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையானதும், அவர்கள் தேடுகிறதுமான தெய்வீக சுகத்தைக் கொடுக்க இயலாத பல “பெதஸ்தா குளங்கள்” அவர்களுடைய வாழ்க்கையில் உண்டு. அவர்கள் உலகப் பிரகாரமான உபாயங்களுக்கு அல்லது சுய—மனநிறைவிற்குத் திரும்பிவிடுகிறார்கள். அவர்கள் அனைத்து வடிவங்களிலும் கிடைக்கக்கூடிய பல்வேறுபட்ட “சுகமாக்கும் பொருட்களைத்” தேடுகிறார்கள், ஆனால் அவர்கள் தேவனை நோக்கிப் பார்ப்பதில்லை. பெதஸ்தா குளத்தினருகில் இருந்த இந்த மனிதனைப் போல, நாமும் நம்முடைய “பெதஸ்தா குளத்தைக்” கடந்து சென்று, நம்முடைய விசுவாசத்தைக் கிறிஸ்து வினுடைய வல்லமையின்மீது மட்டும் வைக்கும்போது கிறிஸ்து மட்டுமே நமக்கு அளிக்கக்கூடிய முழுமையான அற்புத சுகத்தை நாம் பெற்றுக்கொள்ளமுடியும்.

இந்தச் சம்பவத்தை நம்முடைய வாழ்க்கையில் இரு விதங்களில் பயன்படுத்த வேண்டும். முதலாவதாக, நாம் சுகமாக்கப்

படுவதை முதற்காரியமாக விரும்புகிறோமா என்றும், கிறிஸ்து மட்டுமே நம்மைச் சுகமாக்கமுடியும் என்பதை நாம் நம்புகிறோமா என்றும் நம்மை நாமே கேட்டுக்கொள்ளவேண்டும். இரண்டாவதாக, இந்த உலகத்தில் துன்பப்படுகிறவர்களாகவும், சக்தியற்றவர் களாகவும் இருக்கிற மற்ற மக்களுக்கு இயேசு அளித்த மதிப்பை நாமும் அவர்களுக்கு அளிக்கிறோமா என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ளவேண்டும்.

இந்த வேதாகமப்பகுதிக்கு முன்பதாக உள்ள ஒருசில வசனங்களில், ஜீவத்தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாக இருந்த அந்தச் சமாரிய பெண்ணைப்போன்ற காயப்பட்ட மக்களிடம் தம்முடைய சீஷர்கள் தங்களுடைய அன்பை செயல்முறையில் காண்பிக்கவேண்டும் என்ற சவாலை இயேசு அவர்களுக்கு அளித்ததைப் பார்க்கிறோம்: “அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்” (4:35). உலகமெங்கிலும் உள்ள மக்கள் இரட்சிப்பின் சுகத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள் – அவர்கள் அறுப்புக்கு ஆயத்தமாக இருக்கிற விளைநிலங்களைப் போன்றவர்கள், நாம் அந்த வயல்களில் வேலை செய்து, கிணற்றினருகே இருந்த சமாரியப் பெண்ணைப் போலவும் பெதஸ்தா குளத்தினருகில் இருந்த அந்த மனிதனைப் போலவும் இருக்கிற மக்கள் இயேசுவினுடைய இரட்சிப்பையும், ஆவிக்குரிய சுகத்தையும் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்கு உதவவேண்டுமென்று அவர் நமக்கு ஒரு சவாலை அளிக்கிறார். கிறிஸ்து மட்டுமே அளிக்கக்கூடிய அற்புத சுகத்தைப் பெற்றுக்கொள்ளும்படி, தங்களுடைய கிணறுகளையும், குளங்களையும் கடந்து, தேவனை நோக்கிப் பார்க்கிற துன்பப்படும் மக்களிடம் இயேசு வெளிப்படுத்திய மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கையிடுகிறீர்களா?

## அத்தியாயம் பதினான்கு

# வேதவாக்கியங்களைப் புரிந்துகொள்ளுதல்

இயேசு வேதவாக்கியங்களுக்கு மிக அதிகமாக மதிப்பளித்தார் என்று நாம் ஏற்கனவே கற்றறிந்திருக்கிறோம். அவர் வேத வாக்கியங்களை மேற்கோள் காட்டியபோது, அவர் பழைய ஏற்பாட்டைக் குறிப்பிட்டார், ஏனெனில் புதிய ஏற்பாடு அப்போது எழுதப்படவில்லை. அவர் முதலாவதாகப் பேசிய வார்த்தைகளில் "எழுதியிருக்கிறதே" என்ற வார்த்தை இடம்பெறுகிறது; அவர் அதிகமாக கேட்க விரும்பிய கேள்வி, "நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா?" என்பதாகும்.

நீங்கள் சுவிசேஷங்களை வாசிக்கும்போது, இயேசு வேதவாக்கியங்களைப் புரிந்துகொள்வதற்கு மிக அதிகமாக மதிப்பளித்தார் என்பதைக் கவனிக்கத் தவறாதீர்கள். அவர் தம்முடைய மலைப்பிரசங்கத்தில், பழைய ஏற்பாட்டின் ஒரு சிறு எழுத்தையாவது, ஒரு எழுத்தின் உறுப்பையாவது தாம் மாற்றவில்லை என்றும், ஆனால் வேதவாக்கியத்தின் மெய்க்கருத்தையும், பொருளையும் தாம் நிறைவேற்றுவதாகக் கூறியபோது, அவர் பழைய ஏற்பாட்டின் வேதவாக்கியங்களுக்கு மதிப்பளித்தார். இயேசு இந்த வார்த்தைகளைப் பேசியபோது அவருடைய இருதயத்தில் இருந்த பாரம் என்னவென்றால், அந்த மலையில் தம்முடைய பிரசங்கத்தைக் கேட்கும்படி கூடிவந்த மக்கள் வேதவாக்கியங்களைப் புரிந்துகொள்ளவேண்டும் என்பதாகும் (மத்தேயு 5:17-20).

இயேசு மதத்தலைவர்களுடன் விவாதம் செய்து கொண்டிருந்தபோது, யோவான் அந்த உரையாடலை விவரித் திருக்கிறபடி, முதலாவதாக இயேசு எழுப்பின சர்ச்சைகளில் ஒன்று வேதவாக்கியங்களைப் புரிந்துகொள்வதைப் பற்றியதாகும் (யோவான் 5:39-40). பரிசேயர்கள் வேதாகம வல்லுநர்களாக இருந்ததற்காக இயேசு அவர்களைப் பாராட்டினார். அவர் அவர்களை நோக்கி, "நீங்கள் வேதவாக்கியங்களைத் தேடி, ஆராய்ந்து, ஆய்வு செய்கிறீர்கள். வேதவாக்கியங்களும் என்னைக் குறித்து சாட்சிகொடுக்கின்றன; ஆனால் நீங்கள் நித்திய ஜீவனைப்

பெறுவதற்காக என்னிடம் வராமலிருக்கிறீர்கள்" என்று முக்கியமாகக் கூறினார்.

வேதவாக்கியம் உலகத்தோற்றத்தைப் பற்றிய ஒரு பாடப் புத்தகமோ அல்லது நாகரீகத்தின் ஒரு சரித்திரமோ அல்ல என்று இந்த பரிசேயர்களுக்கு (நீங்களும் நானும்) இயேசு கூறினார். வேதவாக்கியங்கள் இரட்சிப்பைப் பற்றிய ஒரு பாடப்புத்தகமாகும்; அந்த இரட்சிப்பும், அந்த இரட்சகரும் இந்த உலகத்திற்கு வந்த சரித்திரச் சூழலை வேதவாக்கியங்கள் உரைக்கின்றன. வேதவாக்கியங்கள் அனைத்தும் இயேசுவைப் பற்றி எழுதப்பட்டவை என்பதை இந்த வேதாகம அறிஞர்கள் புரிந்துகொள்ளும்வரை அவர்களால் வேதவாக்கியங்களைப் புரிந்து கொள்ள முடியாது என்பதை பரிசேயர்களுடனான இயேசுவினுடைய சந்திப்பிலிருந்து நாம் அறிகிறோம். வேதவாக்கியங்கள் மீட்பின் சரித்திரத்தையும், அந்த மீட்பைப் பெற்றுக்கொள்ளும் வழியாகிய மீட்பரைப் பற்றியும் எடுத்துக் கூறும் தேவனுடைய பரிசுத்த வார்த்தைகள் என்று இயேசு கூறினார்.

இயேசுவினுடைய கடைசி வார்த்தைகளும்கூட வேத வாக்கியத்தின்மீது அவர் வைத்த மதிப்புமிக்க தன்மையை எடுத்துரைக்கின்றன. அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்பும், பரமேறுதலுக்கு முன்பும், அவர் அப்போஸ்தலர்களிடமும், அவரிடம் கூடிவந்திருந்த மக்களிடமும் இவ்வாறு கூறினார்:

"...மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார். மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதி யிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே. அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி— எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டிய தாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது...என்றார்" (லூக்கா 24:25-27; 44-47).

வேதவாக்கியங்களை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்ற

தம்முடைய பாரத்துடன் இயேசு தம்முடைய ஊழியத்தைத் துவக்கினார்; அதே பாரத்தை வெளிப்படுத்தி அவர் தம்முடைய ஊழியத்தை முடித்தார். அவரை எதிர்த்தவர்களுக்கும், அவரை மிகுதியான அர்ப்பணிப்போடு பின்பற்றியவர்களுக்கும் அவர் அளித்த போதனைகளும், அவர்களோடு விவாதங்களும் வேதவாக்கியங்களை அவர்கள் புரிந்துகொள்வதில் இருந்த ஆர்வத்தை எடுத்துக்காட்டுகின்றன. அவர் "எழுதியிருக்கிறதே" என்று கூறியும், "வேதவாக்கியங்களில் எழுதியிருக்கிறவைகளை நீங்கள் வாசிக்கவில்லையா?" என்று மக்களைக் கேள்வி கேட்டும் தம்முடைய ஊழியத்தைத் துவங்கினார். வேதவாக்கியங்களைப் புரிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதைத் திறக்கக்கூடிய சத்தியத்தை அப்போஸ்தலர்களும், அவருடைய சீஷர்களும் புரிந்துகொள்ளவேண்டுமென்ற சவாலுடன் அவர் தம்முடைய ஊழியத்தை முடித்தார்: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் எழுதியிருக்கிற வைகளெல்லாம் அவரைப் பற்றியது என்பதே வேத வாக்கியங்களைப் புரிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதைத் திறக்கக்கூடிய சத்தியமாகும்.

இயேசுவினுடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் துவக்கத்திலிருந்து முடிவுவரை, வேதவாக்கியங்கள் புரிந்து கொள்ளப்பட்டு, மனிதர்களுடைய வாழ்க்கையில் பயன்படுத்தப் படவேண்டுமென்பது அவருடைய நோக்கமாக இருந்தது.

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலுமுள்ள வேதவாக்கியங்களின்மீது இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையை நம்முடைய சொந்த வாழ்க்கைகளில் நாம் அறிக்கை யிடுகிறோமா? தேவகுமாரனான இயேசு கிறிஸ்துமூலமாக அனைத்து மனிதர்களுக்கும் மீட்பு உண்டு என்பதற்கு வேத வாக்கியங்கள் சாட்சியாக இருக்கின்றன என்பதை நாம் விசுவாசிக்கிறோமா? வாழ்க்கையை வாழ்வதைப் பற்றியும், அதைச் சரியாக வாழுவதைப் பற்றியும் நமக்கிருக்கும் கேள்விகளுக்கு அவை பதிலளிக்கின்றன என்பதை நாம் விசுவாசிக்கிறோமா? கிறிஸ்து கூறிய வார்த்தைகளில் ஒன்றாகிய "எழுதியிருக்கிறதே" என்ற வார்த்தையினுடைய மெய்க்கருத்தின் அடிப்படையில் நம்முடைய வாழ்க்கையின் புயல்களையும், சூழ்நிலைகளையும் நாம் சந்திக்கிறோமா?

## அத்தியாயம் பதினைந்து

# இயேசு என்னை நேசிக்கிறார்

இயேசு கிறிஸ்துவினுடைய முகத்தைப் பார்த்து, அவரோடு பேசுவது எவ்வாறு இருக்கும் என்று நீங்கள் எப்போதாவது நினைத்திருக்கிறீர்களா? பல காரணங்களுக்காக அது ஒரு வாழ்க்கையை—மாற்றும் அனுபவமாக இருக்கும், ஆனால் அந்த காரணங்களில் அதிக சிறப்பானது, அவருடைய முகத்தில் நீங்கள் காணும் அன்பாகவே இருக்கும். இயேசுவுடன் நடந்து, அவருடன் பேசியவர்கள், அவர்களிடம் அவர் செலுத்திய அன்பில் திருப்தி யடைந்தார்கள்; இந்த அன்பைப் பற்றிய அவர்களுடைய உறுதியான நம்பிக்கை நான்கு சுவிசேஷங்கள் முழுவதிலும் வெளிக்காட்டப் பட்டிருக்கிறது.

யோவானுடைய சுவிசேஷத்தின் பதினோராம் அதிகாரத்தில், மரியாள் மற்றும் மார்த்தாள் என்ற இரண்டு சகோதரிகளுடனான இயேசுவினுடைய சந்திப்பின் சம்பவத்தைப் பார்க்கிறோம்— இந்தச் சம்பவம் லாசரு என்ற அவர்களுடைய சகோதரனிடம் இயேசு வைத்திருந்த அன்பை வெளிப்படுத்துகிறது. லாசரு வியாதிப் பட்டிருந்தான் — எனவே இந்த இரண்டு பெண்களும் அதிக துக்கத்துடன் அதை இயேசுவுக்கு அறிவிக்கும்படி ஆள் அனுப்பினார்கள். “ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியா யிருக்கிறான்” என்று அவருக்கு அறிவிக்கப்பட்டது (3). அவர்கள் இயேசுவுக்கு அனுப்பின செய்தியில், அவர்கள் பயன்படுத்தின “வியாதியாயிருக்கிறான்” என்ற வார்த்தை அவர்களுடைய சகோதரன் மரித்துக்கொண்டிருந்தான் என்பதைச் சுட்டிக்காட்டியது.

லாசரு இயேசுவால் சிநேகிக்கப்பட்டவன் என்று பார்க்கிறோம்; இயேசு அவர்களிடம் உடனடியாகச் செல்லாமல் தாம் தங்கியிருந்த இடத்தில் தாமதித்தார், ஏனென்றால் அவர் லாசருவையும், அவனுடைய சகோதரிகளையும் நேசித்தார். இந்த மூன்றுபேரும் இயேசு தங்களை நேசித்ததை எவ்வளவாக அறிந்திருந்தார்கள் என்பதை

நம்மால் கற்பனை செய்யமுடியும். பின்னர், லாசரு மரித்தபின்பு, இயேசு அவனுடைய கல்லறைக்கு வந்து, "கண்ணீர் விட்டார்" என்று வாசிக்கிறோம் (35). இயேசு தமக்குள் இருந்த துக்கத்தினால் தேம்பியழுததன் காரணமாக அவருடைய உடல் குலுங்கியது என்று மூலபாஷையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் அழுவதைப் பார்த்தவர்கள், 'இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார்! என்றார்கள் (36). இயேசு லாசருவைச் சிநேகித்தார் என்பதை மரியாளும் மார்த்தாளும் மட்டுமல்ல, ஆனால் அவர்களோடு துக்கங்கொண்டாட வந்த யூதர்களும் அறிந்தார்கள்.

மாற்கு எழுதின சுவிசேஷத்தின் பத்தாம் அதிகாரத்தில், "ஐசுவரியவானான வாலிபன்" என்று நாம் அழைக்கிற ஒரு இளைஞனைப் பற்றி வாசிக்கிறோம். இந்த மனிதன் தான் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படி என்ன செய்யவேண்டும் என்பதைக் கண்டறியும்படி இயேசுவை அணுகினான். "இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து" என்று மாற்குவின் சுவிசேஷம் கூறுகிறது (2). அந்த வாலிபனிடம் அவர் வைத்த ஓர் உறுதியான அன்பை வெளிப்படுத்துகின்ற ஒரு கூரிய பார்வையினால் அவர் அவனை உற்று நோக்கினார் என்று மூலபாஷையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஐசுவரியவானான வாலிபன் நித்திய ஜீவனைப் பெறவிரும்பினால் அவன் செய்ய வேண்டியது என்று இயேசு அவனிடம் கூறியதை அவன் செய்யவில்லை. இந்த வாலிபன் மாற்குவினுடைய சுவிசேஷத்தின் ஆசிரியராக இருக்கவேண்டும் என்று சிலர் நினைக்கிறார்கள், ஏனென்றால் இவன் நித்திய ஜீவனைப் பெறுவதற்கான சந்தர்ப்பத்தை உதறிவிட்டு, இயேசுவிடமிருந்து கடந்துசென்றதற்கு முன்பாக இயேசு அவனை அன்புடன் கூர்ந்து நோக்கிய சிறிது விளங்கிக்கொள்ள முடியாத விபரத்தை சுவிசேஷ ஆசிரியர்களில் மாற்கு மட்டுமே குறிப்பிட்டிருக்கிறார். இயேசு அவனைக் கூர்ந்து நோக்கி, அவனில் அன்புகூர்ந்தபோது, இயேசு அவனை நேசிக்கிறார் என்பதை அவன் அறிந்துகொண்டான் என்பதை நாம் நிச்சயமாகக் கூறமுடியும்.

இயேசு தம்முடைய வாழ்க்கையில் சந்தித்த அனைவரையும், ஆயக்காரர்களையும் பாவிகளையும்கூட நேசித்தார். அவர் தம்முடைய நேரத்தை அவர்களுடன் செலவிட்டு, அவர்களுடன் உட்கார்ந்து சாப்பிட்டு, நகரங்களில் அவர்களோடு நடந்த விதத்தின்மூலம் நாம் இதை அறிகிறோம். அவர் ஆவிக்குரியவர்களுக்கு மாத்திரமல்ல, பாவிகளுக்கும் கிடைக்கக்கூடிய நித்திய ஜீவனைப் பற்றி அவர்களுக்கு அறிவித்தார். அவருடைய பாதத்தில் விழுந்து, விலையேறப்பெற்ற தைலத்தினாலும், தன்னுடைய கண்ணீரினாலும் அவற்றைக் கழுவிய அந்தப்

பெண்ணைப்போல, அவருடைய அன்பைப் பெற்றுக்கொண்டவர்கள், நன்றியினாலும், பொங்கியெழும்பும் வியப்பினாலும் நிரப்பப்பட்டார்கள் (லூக்கா 7:36-38).

இயேசுவினுடைய சீஷர்களும் அவருடைய அன்பை உணர்ந்தார்கள். யோவானுடைய சுவிசேஷம் கிறிஸ்துவினுடைய அன்பிற்கு சாட்சியளிக்கிறது. யோவான் தன்னுடைய சுவிசேஷத்தில், "இயேசுவுக்கு அன்பான சீஷன்" என்று பல இடங்களில் தன்னைத்தானே அழைத்துக்கொள்கிறான் (13:23; 19:26; 20:2; 21:7,20). இயேசு யோவானை நேசித்தார் என்ற உண்மையை அவன் நன்கு அறிந்திருந்தான். அவன் இயேசுவினுடைய அப்போஸ்தலர்களில் ஒருவனாக அவருடன் நடந்து அறுபது ஆண்டுகள் கழிந்தபின்பு, வேதாகமத்தின் கடைசிப் புத்தகமான வெளிப்படுத்தின விசேஷத்தை இந்த வார்த்தைகளினால் இயேசு கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தான்: "நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக" (1:5-6). யோவானும், அவனுடைய கூட்டாளிகளும் இயேசுவைப் பின்பற்றினால், அவர் அவர்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக மாற்றுவார் என்று அவர் அவர்களிடம் கூறியிருந்தார். அறுபது வருடங்களுக்குப் பிறகு, "அவர் நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினார்" என்று யோவான் கூறுகிறான். ஆனால், முதல்நிலையாக, "அவர் எங்களைச் சிநேகித்தார்!" என்று யோவான் நினைவுகூருகிறான்.

இயேசு தம்முடைய மூன்றுவருட பொது ஊழியத்தில் தாம் சந்தித்த அனைவரையும் நேசித்தார் – பாவிகள், ஆயக்காரர்கள், ஏழைகள், பணக்காரர்கள், அவருடைய நண்பர்கள், அவருடைய அப்போஸ்தலர்கள், அவருடைய சீஷர்கள் – எல்லாரையும் நேசித்தார். அவர் அதேவிதமாக உங்களையும் நேசிக்கிறார் என்ற மகிமையான உண்மையை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? பல வருடங்களுக்கு முன்பதாக, ஒரு புகழ்பெற்ற இறையியல் வல்லுநரிடம், அவர் கேட்டறிந்த மிக ஆழமான உண்மை என்ன என்ற கேள்வி கேட்கப்பட்டது. அவர் நன்கு யோசித்தப் பின்பு, "இயேசு என்னை நேசிக்கிறார்; நான் இதை அறிந்திருக்கிறேன். ஏனெனில் வேதாகமம் அவ்வாறு கூறுகிறது" என்று பதிலளித்தார். அன்பின்மீது இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கையிடுகிறார்களா? உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் சந்திக்கும் மக்கள், உங்களிடமிருந்து

அல்லாமல், உங்கள் மூலமாக வருகிற ஒரு அன்பினால் தாங்கள் நேசிக்கப்படுவதை அறிந்திருக்கிறார்களா? உயிர்த்தெழுந்த, கிறிஸ்துவிடம், தம்முடைய அன்பிற்கும், என்னுடைய பாதையில் ஒவ்வொரு நாளும் நான் சந்திக்கின்ற காயப்பட்ட மக்களின் அனைத்து வேதனைக்கும் இடையே என்னை வைக்கவேண்டு மென்று நான் ஜெபிக்கத் துவங்கியதிலிருந்து என்னுடைய வாழ்க்கை என்றென்றுமாக மாறியது. அன்பின் கிறிஸ்து அதே காரியத்தை உங்களுக்கும் செய்யவேண்டுமென்று நீங்கள் அவரை வேண்டிக்கொள்ளும்படி உங்களுக்குப் பரிந்துரைக்கிறேன். நீங்கள் அதைச் செய்யும்போது, அவர் எங்கே இருக்கிறார் என்றும், உங்களுடைய வாழ்க்கையின் எஞ்சிய பகுதியை நீங்கள் எங்கே செலவிட விரும்புகிறீர்கள் என்பதையும் கண்டறிவீர்கள்.

## அத்தியாயம் பதினாறு

# காணாமற் போன ஆடு

நாம் காணாமற் போன ஆடுகளைப் போல இருக்கிறோம் என்றும், தேவன் நம்மைத் தேடி, கண்டுபிடிக்க விரும்பும் ஓர் உயர்வுமிக்க அன்பான மேய்ப்பராக இருக்கிறார் என்றும் ஏசாயா கூறியிருப்பதை இயேசு ஆமோதித்தபோது, அவர் ஒரு மதிப்புமிக்க தன்மையை வெளிப்படுத்தினார் என்று நான்கு சுவிசேஷங்களும் கூறுகின்றன – "உங்களில் ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்று காணாமற் போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு, காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்குமளவும் தேடித்திரியானோ? கண்டுபிடித்தபின்பு, அவன் சந்தோஷத்தோடே அதைத் தன் தோள்களின்மேல் போட்டுக்கொண்டு, வீட்டுக்கு வந்து, சிநேகிதரையும் அயலகத்தாரையும் கூட வரவழைத்து: காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்தேன் என்னோடுகூடச் சந்தோஷப்படுங்கள் என்பான் அல்லவா? அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப்பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்"(லூக்கா 15:4-7).

இயேசு காணாமற்போன மக்களை இரட்சிக்கும்படி உலகத்திற்கு வந்தார் (லூக்கா 19:10). அவர் நோயுற்றவர்களுக்கும், துன்பப்படுகிறவர்களுக்கும், ஒரு மருத்துவரின் உதவி தேவைப்படுகிறவர்களுக்கும் ஆவிக்குரிய சுகத்தைக் கொடுக்கும்படி வந்தார். ஆனால், நாம் பல வேளைகளில் பார்த்தபடி, சுய நீதியினால் நிறைந்த மதத்தலைவர்கள், இயேசு நேசித்த பாவிகளிடம் பட்சமாயிருக்கவில்லை. இயேசு பாவிகளுடன் நேரத்தைச் செலவிட்டதைப் பற்றி அவர்கள் குறைகூறினார்கள். குறிப்பாக இந்த இழந்து போன, துன்பப்படும் மக்களிடம் அவர் வெளிப்படுத்தின இரக்கத்தில் அவர்கள் பங்குகொள்ளும்படி இயேசு அவர்களை அழைத்தபோது அவர்கள் வெறுப்படைந்தார்கள்.

இயேசு தம்முடைய கொள்கை விளக்க அறிவிப்பிற்குப் பயன்படுத்தின ஏசாயாவின் உன்னதமான தீர்க்கதரிசனத்தில் அவன்

குறிப்பிட்ட குருடர்கள், கட்டப்பட்டவர்கள், இருதயம் நருங்குண்டவர்கள் ஆகியோரைப் பார்க்க முடியாதவர்களாக மதத்தலைவர்கள் காணப்பட்டார்கள். பாவிகள் இயேசுவை அடிக்கடி சூழ்ந்துகொண்டிருப்பதை அவர்கள் பார்த்தபோது, அவர்களால் பார்க்கமுடிந்ததெல்லாம், “கழுவப்படாத திரள்கூட்டமான” பாவிகளையும், ஆயக்காரர்களையும் மட்டுமே. பரிசேயர்களும், சதுசேயர்களும் தேவன் இவர்களைப் பார்க்கும்விதத்தில் பார்க்கும்படி இயேசு கூறினார்.

இயேசு அந்தத் தரிசனத்தை மதத்தலைவர்களோடு பகிர்ந்துகொண்ட பல வழிகளில் ஒன்று, பாவிகளைத் தேவன் காணாமற் போன ஆடுகளாகக் காண்கிறார் என்று கூறியதாகும். நாமெல்லாரும் காணாமற்போன ஆடுகள் என்றும், உன்னத மேய்ப்பனாகிய தேவன் நம்மைக் கண்டுபிடித்தார் என்றும் தீர்க்கதரிசிகளின் மன்னனான ஏசாயா பிரசங்கித்தார் (ஏசாயா 53:6).

நீங்கள் ஒரு காணாமற் போன ஆட்டைப் போல உதவியற்ற நிலையை உணருவீர்களென்றால், நீங்கள் தேவனால் மிக அதிகமாக மதிப்பளிக்கப்படுகிறீர்கள்; – உங்களைப் போன்ற மக்களுக்காக இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார். அவர் உங்களுக்காக மரிக்கும்படி வந்தார். இயேசு இன்றைக்கு உங்களுடைய நகரத்தின் வழியாக வருவாரென்றால், அவர் ஒரு நாள் முழுவதையும் “சகேயு” என்ற ஒரு பாவியுடன் செலவிட்டதைப் போல, நாள்முழுவதும் உங்களுடன் இருப்பதைத் தெரிந்துகொள்வார் (லூக்கா 19:1-10). அவர் உங்களுடைய வாழ்க்கையின் கதவினருகில் நின்று, பொறுமையுடன் தட்டிக் கொண்டிருக்கிறார், ஏனென்றால் நீங்கள் உங்களுடைய வாழ்க்கையின் கதவைத் திறந்து, அவருடைய அன்பிற்கும், மன்னிப்பிற்கும் பதிலளித்து, அவரை உங்களுடைய மேய்ப்பனாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று அவர் விரும்புகிறார் (வெளிப்படுத்தல் 3:20).

காணாமற்போன ஆட்டைப்போல இருந்த உங்களைக் கர்த்தராகிய நல்ல மேய்ப்பன் கண்டுபிடித்தபின்பு, அவர் தேடி, இரட்சிப்பதற்காக வந்த மற்ற காணாமற் போன ஆடுகளைப் பற்றி இயேசு வெளிப்படுத்தின மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கையிடுவீர்களா? தேவன் யார் என்பதையும், தேவனுடைய மதிப்பீட்டு அமைப்பையும் இயேசு வெளிப்படுத்தியதுபோல, தேவன் காணாமற்போன மக்களுக்கு மிக அதிகமாக மதிப்பளிக்கிறார் என்பதையும் அவர் போதித்தார். உயிர்த்தெழுந்த, ஜீவிக்கிற கிறிஸ்து தம்முடைய மதிப்புமிக்க தன்மைகளை நாம் அறிக்கையிட்டு, இந்த உலகத்தில் காணாமல் போயிருக்கும் துன்பப்படும் மக்களுக்கு இரட்சிப்பை அளிக்கும் அவருடைய மிகப்பெரிய பணியில் அவருடன் நாமும் இணையவேண்டுமென்று விரும்புகிறார்.

## அத்தியாயம் பதினேழு

## காணாமற் போன காசுகள்

“இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்” (லூக்கா 19:10). இந்த வசனம் லூக்காவினுடைய சுவிசேஷத்தின் அடிப்படை வசனமாகவும், இயேசு கிறிஸ்துவினுடைய பணியைப் பற்றிய வாசகத்தின் முக்கியமான கருத்தாகவும் இருக்கிறது. லூக்காவினுடைய சுவிசேஷத்தின் பதினைந்தாம் அதிகாரத்திலிருந்து, உலகத்தின் “காணாமற்போன காரியங்களின்மீது” இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையைப் பற்றி நாம் ஏற்கனவே அறிந்துகொண்டோம். அவர் கூறிய “காணாமற்போன பொருட்களைப் பற்றிய உவமை” உலகத்தின் அனைத்து மக்களுக்கும் அவர் அளிக்கின்ற மீட்பைக் குறிக்கிறது. இதற்கு முந்தின பாடம் ஒன்றில் நாம் இந்த உவமையைப் பற்றிக் கற்றறிந்தோம். இரண்டு வட்டங்களாகப் பிரிந்திருந்த மக்கள் இயேசுவைச் சூழ்ந்திருந்த ஒரு சூழலில் அவர் இந்த மிகப்பெரிய உவமையைக் கூறினார் என்பதை அறிவீர்கள் – இயேசுவைச் சுற்றி ஒரு நெருக்கமான உள்வட்டத்தை அமைத்த மக்கள், தங்களுடைய பாவங்களுக்கான மன்னிப்பைப் பெறுவதற்கு ஆவலுடன் வாஞ்சித்த காணாமற் போன மக்களாக இருந்தார்கள். நியாயப்பிரமாணத்தை மீறுகிறவர்களிடமிருந்து விலகியிருக்க விரும்பின சுயநீதியுள்ள பரிசேயர்கள் இயேசுவிடமிருந்து விலகிச்சென்று, பாவிகள் இரட்சிக்கப்பட்டுக்கொண்டிருந்த அந்த உள்வட்டத்தைச் சுற்றி ஒரு பெரிய வட்டத்தை அமைத்தார்கள்.

அவருடைய உவமை வெளிவட்டத்திலிருந்தவர்களை இலக்காகக் கொண்டிருந்தது, ஏனென்றால் உள்வட்டத்தில் என்ன நடந்துகொண்டிருந்தது என்பதை வெளிவட்டத்தில் இருந்தவர்களிடம் விளக்குவதற்கு அவர் முயற்சித்துக்கொண்டிருந்தார். உள்வட்டத்தில் நடந்துகொண்டிருந்த அற்புதத்தில் வெளிவட்டத்தில் உள்ளவர்களும் பங்குபெறும்படியும் அவர் அழைத்தார். இந்த நோக்கத்தை அடைவதற்காக, “காணாமற் போன பொருட்களைப்” பற்றிய ஒருசில உவமைகளை அவர் கூறினார்.

இந்த உவமைகளின்மூலமாக, பாவிகள் தேவனுடைய பார்வையில் தாங்கள் பெற்றிருக்கும் மிகப்பெரிய மதிப்பை உணருவது மட்டுமல்லாமல், தேவனுடைய அன்பின் இருதயம் அனைத்து மக்களுக்காகவும் எவ்வாறு பொங்கி வழிகிறது என்றும், காணாமற் போய் சிதறடிக்கப்பட்ட வாழ்க்கைகள் மனந்திரும்புதலின்மூலமாகவும், இரட்சிப்பின்மூலமாகவும் மீட்கப்படும்போது, அவருடைய இருதயம் எவ்வாறு களிகூருகிறது என்றும் பரிசேயர்கள் புரிந்துகொள்வார்கள்.

லூக்கா 15ம் அதிகாரத்திலுள்ள இந்த உவமைகளில் ஒன்று, ஒரு பெண் ஒரு விலைமதிப்புள்ள நாணயத்தைத் தொலைத் ததையும், அவள் அதைக் கருத்தோடு தேடியதையும் பற்றிக் கூறுகிறது: "ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக்காசை உடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு காணாமற்போனால், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதைக் கண்டுபிடிக்கிறவரைக்கும் ஜாக்கிரதை யாய்த் தேடாமலிருப்பாளோ? கண்டுபிடித்தபின்பு, தன் சிநேகிதி களையும் அயல்வீட்டுக்காரிகளையும் கூடவரவழைத்து: காணாமற் போன வெள்ளிக்காசைக் கண்டுபிடித்தேன், என்னோடுகூடச் சந்தோஷப்படுங்கள் என்பாள் அல்லவா? அதுபோல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷ முண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (8-10).

அக்காலத்தின் கலாச்சாரத்தில் திருமணமான ஒரு பெண் தன்னுடைய கணவனுக்கு தான் உண்மையாக இருப்பதற்கு அடையாளமாக தன்னுடைய நெற்றியில் அணிந்திருந்த பத்துக் காசுகளில் ஒன்றை இந்த காணாமல் போன காசு குறிக்கிறது என்று சில வேத அறிஞர்கள் நம்புகிறார்கள். அவள் தன்னுடைய கணவனுக்கு உண்மையாக இராவிட்டால், அவள் அந்தக் காசுகளில் ஒன்றைக் கழற்றிவிடுவாள். ஆனால் ஒரு பெண் கணவனுக்கு உண்மையுள்ளவளாக இருந்து, வெறுமனே அந்தக் காசுகளில் ஒன்றைத் தொலைத்திருந்தால், அந்தக் காசை அவள் எவ்வளவு துயரத்தோடு தேடியிருப்பாள் என்று கற்பனை செய்துபாருங்கள்! அவள் அதைக் கண்டுபிடித்தபின்பு எவ்வளவாக மகிழ்ச்சியடைந்திருப்பாள் என்றும் கற்பனை செய்து பாருங்கள்.

இப்படிப்பட்ட கலாச்சாரத்தின் பின்னனியில் இந்தப் போதனை அளிக்கப்பட்டிருக்குமென்றால், இந்த உவமையை அக்கலாச்சாரத்தின் அமைப்பில் நாம் எடுத்துரைக்கும்போது, இயேசு தம்மைச் சுற்றியிருந்த காணாமற் போன மக்கள், பரிசுத்தத்தை அல்லது சுத்திகரிப்பை அனுபவிப்பதற்கான ஆவிக்குரிய எழுச்சியைக் கண்டடையமுடியாத காரணத்தினால், வெறுமனே தொலைந்துபோனவர்கள் என்று அவர் கூறிக்கொண்டிருந்தார் என்று நாம் புரிந்துகொள்கிறோம். அவர்கள்

காணாமற் போன காரணத்தினால், தேவனுடைய மக்களால் இழிவாகக் கருதப்பட்டு, புறக்கணிக்கப்படவேண்டும் என்பதல்ல. தேவனுடனான தங்களுடைய உறவுமுறையில் பத்துக் காசுகளையும் பத்திரமாக வைப்பதற்கான அவர்களுடைய முயற்சியில் அவர்களுக்கு உதவி தேவைப்படுகிறது.

இந்த உவமை மீட்பைப் பற்றியும் எடுத்துரைக்கிறது. நாம் மீட்பைப் பற்றிப் பேசும்போது, ஒருவருக்குச் சொந்தமான ஒரு பொருள் காணாமற் போனபின்பு, ஒரு விலைக்கிரயத்தைக் கொடுத்து அதைத் திரும்பப் பெறுவதை மீட்பு என்று நாம் சொல்லுகிறோம். இந்த அர்த்தத்தின் அடிப்படையில், மீட்கப்பட்ட அந்தப் பொருள் இரண்டு முறை வாங்கப்படுகிறது – முதல் முறையாக பொருளுக்குச் சொந்தக்காரன் அதை விலைகொடுத்து தன்னுடையதாக்கிக் கொள்கிறான்; பின்பு அது தொலைந்துபோனபின்பு ஒரு விலைக்கிரயம் கொடுத்து அதை மீட்டுக்கொள்கிறான். அதே முறையில், நாம் தேவனுக்குச் சொந்தமானவர்களாக இருந்தோம், ஏனென்றால் அவர் நம்மைப் படைத்தார். ஆனால் பாவம் நம்மைத் தேவனிடமிருந்து பிரித்ததினால், நாம் காணாமற் போனோம்; நம்மை மீட்பதற்காக தேவன் நம்மை மீண்டும் விலைகொடுத்து வாங்கவேண்டியிருந்தது – அவர் அதைத் தம்முடைய பூரணமான குமாரன் இயேசுவினுடைய தியாகமுள்ள பலியின்மூலமாகச் செய்தார்.

ஒரு சிறுபையன் தன்னுடைய தகப்பனுடன் சேர்ந்து ஒரு மாதிரிப்படகை (ஒரு சிறிய படகு) உருவாக்கினான். அவர்கள் வாழ்ந்துகொண்டிருந்த இடத்திற்கு அருகே இருந்த கடலின் தண்ணீர்களில் அந்தச் சிறிய படகை கடலில் மிதக்கவிட்டுக் கொண்டிருந்தபோது, கடலலைகள் அந்தச் சிறிய படகை அவர்களிட மிருந்து தூரமாக கடலுக்குள் இழுத்துச் சென்றது. சில வாரங்கள் கழித்து, அந்தப் படகை கடற்கரை அருகிலிருந்த கடையின் ஜன்னலில் அவர்கள் கண்டுபிடித்தார்கள். அந்தக் கடையினுடைய உரிமையாளரிடம் படகைத் திருப்பித் தரும்படிக்கேட்டபோது, அவர்கள் அதை விலைகொடுத்து வாங்கிக்கொள்ளவேண்டும் என்று அவர் சொன்னதைக் கேட்டு அவர்கள் மனமுறிவடைந்தார்கள். ஆனால் அந்தப் படகை அவர்கள் விலைகொடுத்து வாங்கியபின்பு, அந்தச் சிறுபையன் படகைப் பார்த்து, “நீ இரண்டுதரம் என்னுடையதாக இருக்கிறாய். நீ எனக்குச் சொந்தம், ஏனென்றால் நான் உன்னைச் செய்தேன் (உருவாக்கினேன்); இப்போதும் நீ எனக்குச் சொந்தம், ஏனென்றால் நான் உன்னை மீண்டும் விலை கொடுத்து வாங்கினேன்” என்று சொன்னான்.

இந்தச் சிறுபிள்ளை தன்னுடைய படகுடன் பேசின வார்த்தைகள்

“மீட்பு” என்ற வேதாகமச் சொல்லிற்கு ஒரு சரியான பொருள்விளக்கமாக அமைகிறது. அவன் தன்னுடைய படகை மீட்டுக்கொண்டான். அவன் தன்னுடைய படகை உருவாக்கி, அதை மீண்டுமாக விலைகொடுத்து வாங்கியதைப் போல, தேவன் நம்மை உருவாக்கி, நம்மை மீண்டுமாக விலைகொடுத்து வாங்கினார். அவர் கொடுத்த விலைக்கிரயம் தம்முடைய ஒரே பேறான குமாரன். காணாமற்போன காசு பின்பு கண்டுபிடிக்கப்பட்ட உவமை, மீட்பைப் பற்றிய இந்தக் கருத்தை எடுத்துக்காட்டுகிறது.

இயேசு வெளிவட்டத்திலிருந்தவர்களிடம் பேசுகையில், அவரைச் சுற்றியிருந்த பாவிகள், பாவிகளாக இருப்பவர்களைக் காட்டிலும் அதிகமானவர்கள் என்று பரிசேயர்களிடம் கூறினார். அவர்கள் தேவனால் உருவாக்கப்பட்டவர்கள், காணாமற் போனவர்கள், பின்பு அவரால் மீட்கப்பட்டவர்கள். அந்தப் பெண் காணாமற் போன தன்னுடைய காசைக் கண்டுபிடித்து, மீட்டுக்கொண்டபோது மகிழ்ச்சியடைந்ததைப் போல, பரலோகத்தின் தேவதூதர்கள் காணாமற் போன பாவிகளை மீண்டுமாக தேவனுடைய குடும்பத்திற்குள் திரும்ப அழைத்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறார்கள். பரிசேயர்கள் மீட்கப்படவேண்டியதாக இருந்த அந்தக் காணாமற் போன காசுகளைப் போலிருக்கும் பாவிகளைப் பற்றிய தங்களுடைய மனப்போக்கை மாற்றி, அவர்கள்மீது தாம் வைத்த அதே மதிப்புமிக்க தன்மையை அவர்களும் வைக்கவேண்டுமென்று இயேசு அவர்களுக்கு ஒரு சவாலை அளித்தார்.

நீங்கள் ஒரு காணாமற் போன காசாக இருக்கிறீர்களா? இந்த உலகத்தில் காணாமற் போன காசுகளில் ஒன்றாக நீங்கள் இருந்தால், இயேசு உங்கள்மீது மிகப்பெரிய மதிப்பை வைத்திருக்கிறார் என்பதை உணருங்கள். அவர் உங்களை மீட்டெடுத்து தமக்குச் சொந்தமாக்கிக் கொள்வதற்கு ஆர்வமுடன் இருக்கிறார்; இது நடக்கும்போது, பரலோகத்தின் தூதர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் கெம்பீரிப்பார்கள். நீங்கள் அந்தச் சிறுபையனின் படகைக்போல ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டு, மீட்கப்பட்டிருந்தால், உலகத்தில் காணாமற் போயிருக்கும் மற்ற காசுகளின்மீது இரக்கமுள்ளவர்களாக இருக்கிறீர்களா? மீட்கப்பட்டு, தேவனிடம் ஒப்புவிக்கப்படவேண்டிய காணாமற் போன காசுகளின்மீது (வாழ்க்கைகள்) இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கையிடுகிறீர்களா?

## அத்தியாயம் பதினெட்டு

## காணாமற் போன குமாரர்கள்

இயேசு வெளிவட்டத்திலிருந்தவர்களுக்கு காணாமற் போன காசுகளின் மதிப்பைப் பற்றிப் போதித்தப்பின்பு, அவர் தொடர்ந்து கெட்ட குமாரனின் உவமையைக் கூறினார். ஒரு மனிதனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். இளைய குமாரன் தன்னுடைய தகப்பனிடம், “தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும்” என்று கேட்டான். எனவே தகப்பன் இரண்டு குமாரர்களுக்கும் தன்னுடைய ஆஸ்தியைப் பங்கிட்டான். சில நாட்களுக்குள்ளாக, இளைய மகன் தன்னுடைய பங்கைச் சேர்த்துக்கொண்டு, ஒரு தூரதேசத்திற்குப் பிரயாணமாகச் சென்று, அங்கு துன்மார்க்கமான வாழ்க்கையினால் தன்னுடைய பங்கை அழித்துப்போட்டான்.

“எல்லாவற்றையும் அவன் செலவழித்தபின்பு, அந்த தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று. அப்பொழுது அவன் குறைவுபடத்தொடங்கி, அந்தத் தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக் கொண்டான். அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான். அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான், ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை.

“அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன். நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி, எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான்.

“அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ்செய்தான். குமாரன் தகப்பனை நோக்கி: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப் படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான். அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி: நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்கு பாதரட்சைகளையும் போடுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள். நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம். என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான் என்றான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்” (லூக்கா 15:11-24),

இந்தப் போதனையின் சூழல், இயேசு பாவிகளிடமும் பரிசேயர்களிடமும் ஒரே நேரத்தில் பேசிக்கொண்டிருந்த காரியங்களை ஒத்திருக்கிறது. இயேசு பாவிகளுடன் இருப்பதைக் கண்டு பரிசேயர்கள் அமைதியிழந்தபோது, அவர் அவர்களுடைய கோபத்தை ஒரு சவாலுடன் சந்தித்தார். அது இயேசு அவர்களைப் பார்த்து இவ்வாறு கூறுவதைப் போலிருந்தது. நீங்கள் இங்கு பார்ப்பவர்கள் அனைவரும் ஆயக்காரர்களும், பாவிகளுமாக இருக்கிறார்கள், ஆனால் தேவன் அவர்களைத் தம்முடைய குமாரர்களாகக் காண்கிறார். இந்தப் பாவிகளில் சிலர் தங்களுடைய சுயசித்தத்தைச் செயல்படுத்தி, உலகத்திலிருந்து தங்களுடைய வாழ்க்கையைப் பிரித்தெடுத்தத் தேவனுடைய குமாரர்களாக இருக்கிறார்கள். ஆனால் இந்தக் குமாரர்கள் அறிவின்றி தெரிந்தெடுத்த காரியங்களின் விளைவுகளைத் தேவன் பயன்படுத்தி, அவர்களைத் தங்களுடைய பிதாவின் வீட்டிற்குள் திரும்பக் கொண்டு வந்தார். அதைப் பற்றியே பரலோகம் கரிசனை கொள்கிறது – அனைத்து தூதர்களும் மகிழ்ச்சியுடன் களிகூருகிறார்கள்? நீங்கள் ஏன் மகிழ்ச்சியடையவில்லை?

இந்த உவமையிலுள்ள தகப்பன், தன்னுடைய மகன் தன்னுடைய சுயசித்தத்தைப் பயன்படுத்துவதை அனுமதித்தார்– தேவனும் நம்மிடம் இதே முறையில் செயல்படுகிறார். நாம் தெரிந்துகொள்ளும் காரியங்கள் அவருடைய நேரடியான சித்தத்திற்கு விரோதமாக இருந்தாலும்கூட, அவர் அக்காரியங்களை அனுமதிக்கிறார். நாம் முட்டாள்த்தனமாக தெரிந்துகொள்ளும் காரியங்களின் விளைவுகள், நமது தவற்றை உணரச்செய்கின்றன.

அவை நம்மை மாற்றி நம்முடைய வாழ்க்கைக்கான பிதாவினுடைய சித்தத்திற்கு நம்மைத் திருப்புவதற்கு அவர் அவற்றை அனுமதிக்கிறார்.

நீங்கள் அந்தக் கெட்டகுமாரனைப் போல ஒரு தூரதேசத்தில் “துன்மார்க்கமான ஜீவியத்தில்” உங்களுடைய வாழ்க்கையை வீணாக்கிக்கொண்டிருப்பதன் காரணமாக, உங்களுடைய பாவகரமான வாழ்க்கையினால் உங்கள் வாழ்க்கையில் கசப்பான சூழ்நிலைகள் ஏற்படுமானால் உங்களுடைய பரலோகப் பிதா உங்களை நேசிக்கிறார் என்பதை உணருங்கள். நீங்கள் தவறான காரியங்களைத் தெரிந்துகொள்வதற்கு அவர் உங்களை அனுமதித்தாலும், உங்களுடைய வாழ்க்கையின் பல வருடங்களை நீங்கள் வீணாக்குவதை அவர் காணும்போது வேதனைப்படுகிறார். ஆனால் உங்களுக்கு ஒரு நற்செய்தி என்னவென்றால், நீங்கள் உணர்வடைந்து வீட்டிற்குத் திரும்பிவரும்போது, அவர் உங்களை வரவேற்பதற்காக சாலையில் இறங்கி வந்து உங்களை சேர்த்துக் கொள்ளுவார். கெட்ட குமாரர்களின் மீது கிறிஸ்து வைத்த மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கையிடுகிறீர்களா? நீங்கள் உங்கள் வாழ்க்கையில் ஒருபோதும் ஒரு கெட்ட குமாரனாக இராதவர்களாக இருப்பீர்களென்றால், கெட்ட குமாரர்களாக இருக்கும் மற்றவர்களுக்காக உங்களுடைய இருதயத்தில் கிறிஸ்துவின் அன்பு உண்டா? அவர்கள் திரும்பிவரும்போது, நீங்கள் அளவற்ற மகிழ்ச்சியடைகிறீர்களா? மதத்தலைவர்கள், தேவனைவிட்டு விலகிய கெட்ட குமாரர்களிடம் கிறிஸ்துவின் அன்பை அறிக்கையிடவில்லை. கெட்ட குமாரர்கள் திரும்பி வந்தபோது, அந்தக் கொண்டாட்டத்திலிருந்து அவர்கள் விலகிச் சென்றது மட்டுமல்ல, அவர்கள் அந்தக் கொண்டாட்டத்தைக் குறித்து மகிழ்ச்சியற்றவர்களாக இருந்தார்கள். இயேசுவைச் சுற்றி நெருக்கமாக இருந்த அந்த உள்வட்டத்தில் அவர்களால் ஆயக்காரர் களையும், பாவிகளையும் மட்டுமே பார்க்கமுடிந்தது.

இன்றைக்கு நம்முடைய இருதயங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் கிறிஸ்துவினுடைய அன்புடன் நாம் இணைக்கப்பட்டிருந்தால், காணாமற் போன குமாரர்கள் வீட்டிற்குத் திரும்ப வரும்போது அவர்களை நாம் வரவேற்று, நிலைநிறுத்தும்படியான ஒரு சவாலை அவர் நமக்கு அளிக்கிறார். தேவனுடைய கெட்ட குமாரர்கள் மனந்திரும்பி வீட்டிற்கு வரும்போது, பரலோகத்தின் தேவதூதர்களைப் போல, நாமும் மகிழ்ந்து களிகூரக் கடவோம். பரலோகப் பிதாவைப் போல, நாம் அவர்களை அரவணைத்து, அவர்கள் தேவனுடைய குடும்பத்தில் பங்குவகிக்க

வில்லை என்று அவர்கள் தெரிவிக்கும் மறுப்புகளைப் புறம்பே தள்ளி, உயர்ந்த வஸ்திரத்தையும் மோதிரத்தையும் அணிவித்து, ஒரு பெரிய கொண்டாட்டத்தில் ஈடுபடவேண்டும்! தேவனுடைய குமாரர்களும், குமாரத்திகளும் காணாமற் போனார்கள்; இப்போது கண்டுபிடிக்கப்பட்டார்கள். அவர்கள் மரித்தார்கள், ஆனால் இப்போது அவர்கள் மீண்டுமாக உயிரடைந்திருக்கிறார்கள்!

---

# கிறிஸ்துவின் மதிப்புமிக்க தன்மைகள் (பகுதி 1)

இயேசுவின்
போதனைகளும்,
ஊழியமும்